# LITTLE PETER

---

# பாலிய பரித்தியாகி

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

**Dedicated**

WITH THE GREATEST VENERATION
TO THE NOBLE MOTHERS
OF ALL OUR MISSIONARIES
IN THE DIOCESE OF JAFFNA.

S. A.

---

யாழ்ப்பாண மேற்றிராசனத்தில்
திரு ஊழியம் புரிந்துவரும் குருமாரின்
மேன்மைவாய்ந்த அரிய அன்னையர்க்கு, யான் இத்தை
மிக வணக்கத்துடன் தத்தம்செய்கிறேன்.

சூ. அ.

---

*Imprimatur :*

✠ J. A. GUYOMAR, O. M. I.
Bishop of Jaffna.

6th June, 1931.

005274

J. M. J.

# LITTLE PETER

BY

ALBERT BESSIERES, S. J.

*Translated into English by Marie de Chateau-Verdun.*

*Translated into Tamil*

BY

S. ARULANANTHAM,

*Teacher, St. Patrick's College, Jaffna.*

24TH. MAY. 1931.

925
ARU

யேசு மரி சூசை துணை.

# பாலிய பரித்தியாகி

அல்லது

தன் பிதாவை மனந்திருப்பத் தனதுயிரைப் பலியாக்கின

# சிறிய பீற்றரின் சரிதை

இஃது

ஆங்கில நூலிலிருந்து

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரிப்

பிரதம ஆசிரியருள் ஒருவராகும்

**சூ. அருளானந்தம் அவர்களால்**

மொழிபெயர்க்கப்பட்டது.

1931-ம் ஆண்டு வைகாசி மாசம் 24-ந் திகதி.

# முகவுரை

இச் சிறிய சரிதை விசேஷமாகப் பாலர்களுக்காகவே மொழிபெயர்க்கப்பட்டதாயினும், இத்தை வாசிக்கும் பெரியோர்களுக்கும் இது நன்மை பயக்காதுவிடாதென்பது நமது துணிபு. நாம் பரகதி சேரவேண்டில் யாவரும் சிறுவர்களைப்போலாகவேண்டுமன்றோ! இத்தை மொழிபெயர்த்தபின் நமது கர லிகித பத்திரத்தைத் தற்போது கொழும்புத்துறைச் சஞ்சுசையப்பர் ஸ்தாபனத்துக்குச் சிரேஷ்டராயிருக்கும் அதி வண. சூ. ஆசீர்வாதம் சுவாமியவர்களின் பார்வைக்கு யான் அனுப்பிவைத்தேன். அவர் தமது கடு ஊழியத்தையும் பறுவாய்பண்ணாது, அதனிலிருந்த பிழைகளைத் திருத்தியதுடன், கருணைகூர்ந்து ஒரு மதிப்புரையையும் வரைந்து தந்தார். அவ்வன்புக்கு நாமென்றுமே கடப்பாடுடையேம். அவர் தந்த அரிய மதிப்புரையையே இதன் முகவுரையாய் ஏற்றுக்கொள்ளும்படி, இச் சரிதையை வாசிப்போரை யான் கோருகின்றேன்.

சூ. அ.

---

# மதிப்புரை

மானிட ஆன்மாக்கள்மட்டிற் சருவேசுரன் நடந்துகொள்ளும் ஆச்சரியமான தன்மையை ஆராய்வாக யோசிக்குமிடத்து மதி மயங்கித் திகைப்புறவேண்டியிருக்கின்றது. எத்தனையோ பேர் மெய்யான கடவுளை அறியாது அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்திக் கிடந்து அப்படியே இறந்துவிடுகின்றார்கள். வேறெத்தனையோ பேர் புத்தி விபரம் அறிந்த நாட் தொடங்கி, உலகஞ் சரீரம் பிசாசு எனுஞ் சத்துருக்களுடன் கடும் போராடி, பயங்கரமான சோதனைகளை வென்று ஈடேற்றம் அடையவேண்டியவர்களாகின்றார்கள். இன்னும் எத்தனையோ பேர் கொடிய பாடுகள் பட்டு இரத்தஞ் சிந்தி வேதசாட்சிகளாகி மோட்சமுடியை அடையவேண்டியவர்களாகின்றார்கள். பாவ அந்தகாரம் நிறைந்த படுகுழியில் ஒருகாலம் அமிழ்ந்திக்கிடந்தவர்களாகிய மரியமதலேனம்மாள், அகுஸ்தீனார், மார்கறேற் கோர்ட்டோனா ஆதியோரைச் சருவேசுரன் கைப்பிடியாகப் பிடித்து அவர்களுக்குத் தமது வரப்பிரசாதங்களை அள்ளிஇறைத்து "இதைப் பெற்றுக்கொள், மனந்திரும்பு" என்று கற்பித்து சுத்தவாளர்களாகும்படி அவர்களை வலுவந்தஞ்செய்த பான்மையாய் அவர்களைப் பரிசுத்ததனத்தின் கொடுமுடிமட்டாய் கூட்டிச்செல்லலானார். இன்னும் வேறெத்தனையோபேரைச் சருவேசுரன் அவர்கள் குழந்தைகளாக வளர்த்தப்பட்ட தொட்டிலிலிருந்தே வாரி அணைத்து மடிமேலிருத்தித் தமது அன்பின் முத்தங்களை அவர்கட்குச் சொரிந்து அர்ச்சியசிஷ்டதனத்தின் பாதையில் ஓட்டமும் பாய்ச்சலுமாகச் செல்லச் செய்திருக்கின்றார். அம்மட்டா அவர்களைத் தமது ஒக்கலையில் ஏந்திப் பரலோக வாசலில் இறக்கிவிட்டபான்மையாய் அவர்கள்மட்டில் அநுக்கிரகங் காண்பித்து மோட்ச இராச்சியத்திற் சேரும்படி செய்திருக்கின்றார். நாம் கடைசியிற் கூறியவர்களின் வரிசையிலுள்ள சத்தவாளர்களுடைய தொகை இக்காலத்தில் வரவர அதிகரிப்பதைக்கண்டு திருச்சபை பேரானந்தங் கொள்ளுகின்றது.

"பாலியரும் அர்ச்சியசிஷ்டர்கள் ஆவார்கள்" எனப் பத்தாம் பத்திநாதர் கூறிய தங்க வாக்கியம் உள்ளபடி தீர்க்கதரிசன வாக்கியம் என்பதை நமது காலத்துப் பாலர் பாலகிகள் தமது சீவியத்தினால் தெள்ளத்தெளிவாக வற்புறுத்தி விளங்கவைக்கின்றனர். சின்னஞ் சிறிய வயசிற் புத்தி விபரம் அறிந்தவுடன் திவ்வியநற்கருணை பெறும் நல் வழக்கம் பாலியருட் பரம்புமாயின் அவர்கள் மத்தியிலும் அர்ச்சியசிஷ்டர்கள் தொகை பெருகும் எனப் பத்தாம் பத்திநாதர் கூறியுள்ளபடி, பாலவயசிற் சற்பிரசாதம் உட்கொள்ளும் பாக்கியம் பெற்ற பல பாலர் பாலகிகள் அர்ச்சியசிஷ்டர்களாகச் சீவித்து அர்ச்சியசிஷ்டர்களாக மரிப்பதை நாம் இக்காலத்தில் கண்டுவருகின்றோம். "கிதபொன்கலன்" எனும் நாமத்தினால் நாம் எல்லாரும் அறிந்தவராகிய நற்கருணைப் பாலிய அப்போஸ்தலன் மாத்திரமன்று பாலிய மிக்கேல், பாலிய கிஞ்ஞே அருளாயி, பாலிய ஊசேற், பாலிய நெல்லி, பாலிய பீற்றர் ஆதியோரும் இன்னும் பலரும்

சிறுவயசிற் சற்பிரசாதம் பெற்றுக்கொள்ளும் பாக்கியத்தினால் பரிசுத்த தனத்தின் கொடுமுடியை அடைந்து அர்ச்சியசிஷ்டர்களாகச் சீவித்து அர்ச்சியசிஷ்டதனத்தின் நறுமணங்கமழப் பரலோகபிராப்தியானவர்கள்.

நாம் மேலே கூறிய சிறுவர் சிறுமிகளுட் பாலிய பீற்றர் என்பவரின் சரிதை தமிழிலும் பெயர்க்கப்பட்டுக் கரலிகித பத்திரமாக நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இச் சிறு சரித்திரத்தை மொழிபெயர்த்தவர் பொருத்தமுறக் கூறியவாறு இச் சின்னஞ் சிறிய பாலியனைப் “ பாலிய பரித்தியாகி ” என அழைத்தல் பல்லாயிரம் விசையும் தகும். இவரிடம் விளங்கிய அர்ச்சியசிஷ்டதனத்தின் உன்னத நிலையை விசேஷ விதமாய் விளங்கச்செய்வது பாலிய வயசிலும் இவரிடம் காணப்பட்ட பரித்தியாகக் குணமேயாகும். நற்கருணை நாதரை இப்பாலியன் ஒவ்வொருநாளும் பெற்றுக்கொண்டுவரவே பாவிகளைத் தேடிப் பாவிகளுக்காகப் பலியாகிய நமது திருமீட்பர், ஒவ்வொருநாளுமே தமது பலியைப் புதுப்பித்துவரும் அன்பின் பலியாகிய திருமீட்பர், இப்பாலியனுடைய உள்ளத்திலும் அன்பினாற் பலியாகும் வாஞ்சையை மூட்டிவிடலானார். விடவே இப்பாலியனும் நெடுநாட்பட்ட பாவியாக இருதயக் கடினம் படைத்திருந்த தனது தகப்பனை மனந்திருப்பும்பொருட்டுத் தன்னையும் யேசுநாதசுவாமிக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கலானார். “ நீ இளம் பராயத்தில் மரிக்கவேண்டும் ” எனக் கீத பொன்கலனுக்கு எங்கள் ஆண்டவர் சொன்னபொழுது “ ஆம் ஆண்டவரே ” என்று அப் பாலியன் சொன்னவாறு சின்னஞ் சிறிய பாலனாகிய பீற்றரும் “ நீ உன் தகப்பனை மனந்திருப்பும்படி பாலிய வயசில் மரணிக்க ஆயத்தமா ” எனத் தனது இருதயத்தில் எழுந்தருளிவந்த யேசுநாதர் சொல்லக் கேட்டபொழுது “ ஆம் ஆண்டவரே ” யெனத் துணிகரத்துடன் கூறலாயினர். சருவேசுரனும் இப்பாலியனுடைய பலியை ஒப்புக்கொண்டு அவனுடைய வீரச் செயலுக்குச் சம்பாவனையாக இவன் தகப்பனை மனந்திரும்பச்செய்தார். இச் சின்னஞ் சிறிய பாலியனின் வீரச் செயலானது கல்நெஞ்சனான இவனுடைய தகப்பனுடைய உள்ளத்தை எவ்வாறு உருக்கியது என்பதை நாம் மதிப்புரை கூறும் நூல் இனிது விளக்குகின்றது.

நாம் குறிக்கும் நூலானது முதல் நூலாகிய பிராஞ்சியத்தினின்றும் பெயர்க்கப்பெற்ற ஆங்கில நூலிலிருந்து சம்பத்திரிசியார் கல்லூரிப் பிரதம ஆசிரியருள் ஒருவராகும் சிறீமான் எஸ். அருளானந்தம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. அது சிறிய பாலர் பாலகிகள் தானும் எளிதில் விளங்கக்கூடிய தெள்ளிய நடையில், செவ்விய போக்கில் எவர் மனசையும் எளிதில் கவரக்கூடிய மதுரரசம் சொரியும் பான்மையுடையது. நாம் இந்நூலை வாசித்துப் பேரானந்தங் கொண்டதுபோலவே ஏனைய கத்தோலிக்கரும் ஆனந்திக்குமாறு இந்நூல் அதி சீக்கிரம் அச்சேற்றப்பட வேண்டுமென்பது நமது துணிபு. சிறுவர் சிறுமிகளுக்கு நற்கருணை நாதரில் அன்புமூட்ட விரும்புவார் இதனைத் தாமும் வாசித்துத் தம் கண்காணிப்பிலுள்ள சிறுவர் சிறுமிகளும் அதனை வாசிக்கும்படி செய்தல்வேண்டும்.

இந்நூலையும் பாலிய சுத்தவாளருடைய சரிதங்களைக் கூறும் இது போன்ற வேறு சில நூல்களையும் நாம் வாசித்தவிடத்து நமது அவதா



னத்திற்பட்ட ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிடல் நலமாகும் என்று எண்ணுகின்றோம். சகலவித பரிசுத்ததனத்துக்கும் ஊற்றாயிருப்பவர் மாசில்லாத குழந்தைகளுடைய இருதயங்களில் அடிக்கடி எழுந்தருளிவருவதால் இவர்கள் அர்ச்சியசிஷ்டர்களாதல் அத்துணை ஆச்சரியமான விஷயமல்ல. ஆனால் இப் பாலியர் இச் சின்னஞ் சிறிய பராயத்தில் நமது திருமீட்பரை எப்படி அறிந்தார்கள்? அவரை எல்லாத்துக்கும் மேலாக நேசிக்கவேண்டுமென எப்படி உணர்ந்தார்கள்? அவருக்காகத் தங்களைப் பலியாக்குதல் எவ்வளவு மேலான புண்ணியச் செயல் என்பதை எங்கு கற்றுக்கொண்டார்கள்? “ நானும் என் சின்ன யேசுநாதரும் ஒருவர் ஒருவரை எவ்வளவாகத்தான் நேசிக்கிறோம் ” என்று சொல்லும்படி இவர்களுக்கு அடிக்கடி போதித்த உபாத்தியாயர் யாவர்? பரித்தியாகக் கிருத்தியங்களையும் யேசுக்கிறீஸ்துநாதருக்காக அன்பினால் தூண்டப்பட்டுச் செய்யும் ஒறுத்தல்முயற்சிகளையும் இவர்களுக்குப் பயிற்றிவைத்தவர்கள் யாவர்? பாலிய அர்ச்சியசிஷ்டர்களுடைய சீவியத்தைப் படித்துப்பார்த்த ஒவ்வொருவரும் ஒரே குரலாய்ச் சொல்லக்கூடிய விடை எதுவென அறிவோம். இவர்களுடைய உத்தம கிறீஸ்த பத்திசாலிகளாகிய தாய்மார் தாமே இப்படியெல்லாஞ் செய்துவைத்தவர்கள். உத்தம கிறீஸ்த நாடாகத் திகழ விரும்பும் நாடெதுவோ, பரலோகத்துக்கு அர்ச்சியசிஷ்டர்களைப் பெருக்கிவிட விரும்பும் நாடெதுவோ அந்த நாடு உத்தம கிறீஸ்த அன்னையர்களாகிய புண்ணிய சீலிகள் பெருகிய நாடாக இருத்தல் வேண்டும்.

பாலிய அர்ச்சியசிஷ்டர்கள் அதிகமாகப் பெருகும் நாடுகளாகிய பிரான்சு இத்தாலி ஐயர்லாந்து முதலிய நாடுகளை அவதானிப்போமாயின் நாம் சொல்லுவதன் உண்மையை எளிதில் உணர்ந்துகொள்ளுவோம். பிரான்சுதேசத்துத் தாய்மார் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதோடு அவர்கட்கு நற்கருணைநாதரில் அன்பையும் ஊட்டிவருவர். “ என் உதரக் கனியைத் தேவமயமான குழந்தையாக உருவாக்கிவிடும் ” எனும் ஆழ்ந்த கருத்தமைந்த செபத்தைச் செய்யத் தெரிந்த தாய் தன் குழந்தைகளை அர்ச்சியசிஷ்ட குழந்தைகளாக்குவதற்குத் துணைபுரிவதில் வல்லபம் மிக்கவள் என்று சொல்லவும் வேண்டுமா? இத்தாலி, பிரான்சுதேசத்துத் தாய்மார் கூட்டங் கூட்டமாகக் கோவில் சென்று தங்கள் பிள்ளைகளுள் ஒரு பிள்ளையாவது தேவ அழைத்தலைப் பெற்றுச் சுவிசேஷத் தொண்டு புரியவேண்டுமென மன்றாடிவருவார்களாம். தங்கள் பிள்ளைகள் சருவேசுரனை நேசிக்க அறிந்தவுடனேயே அவர்கள் தேவனுக்காகத் தங்களை ஒறுத்து நடந்து பரித்தியாகக் கிரிகைகளைச் செய்யப் பயிற்றிவிடுவார்களாம். இப்படியான வீரத் தாய்மார் உள்ள நாடுகளில் பாலிய அர்ச்சியசிஷ்டர்கள், சின்னஞ் சிறிய பீற்றரைப்போலும் பாலிய பரித்தியாகிகள், விளங்குதல் ஒரு சிறிதாவது ஆச்சரியமல்லவே.

இதனை வாசிக்கும் யாழ்ப்பாணத்துத் தாய்மார்களே! தாய்மார்களாக வரவிருக்கும் கன்னியர்களே, உங்களுடைய அழைத்தல் எத்துணை மகத்தான அழைத்தல் என்பதை யோசிக்கமாட்டீர்களா? நீங்கள் நல்ல மனங்கொண்டு பிரயாசப்படின் அர்ச்சியசிஷ்டர்களுக்குத் தாய்மார்கள் ஆவீர்களே. நமது நாட்டுப் பண்டைக்கால மாதர் தம் மக்கள் போர்க்

களத்திற் பெரிதும் வீரச்செயல் விளங்க வெற்றியாளர் ஆகவேண்டுமென விரும்பி

"வேல்கை கொடுத்து வெளிது விரித்து உடீஇ
பாறு மயிர்க்குடுமி எண்ணெய் நீவி
ஒரு மகனல்லது இல்லாள்
செருமுகநோக்கிச் செல்கென விடும்" வழக்கமுடையராம்.

ஆயின் ஆன்ம சத்துருக்களுடன் போராடி ஈற்றில் வெற்றிபெற்று மோட்சமுடிபெறச் செய்யும்படி தங்கள் குழந்தைகளை ஆயத்தஞ்செய்து வைத்தல் இன்னும் எத்தனைமடங்கு அதிகம் புகழ்ச்சிக்குரிய செயல். இத்தொழிலுக்கு ஒப்பான தொழில் எது? மிக்கான தொழில் எது? நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கீத பொன்கலனுக்கும் சின்னஞ் சிறிய பீற்றரைப்போலும் பாலிய பரித்தியாகிகளுக்கும் தாய்மார்களாகலாமே. அம்மட்டா ஒவ்வொருவரும் ஒவ்வொரு சவேரியாருக்கும் யோசேவாஸ் முனீந்திரனுக்கும் தாய்மார்களாகலாமே. இது முடியாத காரியமா? தேவ வரப்பிரசாத உதவியால் முடியாதது எது? ஆதலால் அன்பு மிக்க தாய்மார்களே அர்ச்சியசிஷ்டர்களை ஆக்கிவைக்கும் உன்னத தொழிலில் நீங்கள் ஒவ்வொருவரும் கைவந்த தாய்மார்களாகும்படி இடையீடின்றிப் பிரயாசப்படுவீர்களாக.

தூ. ஆ. O. M. I.

---

# சில சிறிய சிந்தனைகள்

## 1

நமது சிறிய நண்பர்காள்!

சிறிய பீற்றரின் சரிதையை நீங்கள் படித்துப்பார்க்குமுன், அவருடைய காலத்தில் தேவநற்கருணை என்னும் தேவதிரவிய அனுமானத்தைப்பற்றித் திருச்சபையிலே நடந்த ஒரு இயக்கத்தைக் குறித்து ஒரு சிறிது சொல்லவேண்டுமென நினைக்கிறேன்.

நமது திவ்விய இரட்சகர் மானிட சட்டைசாத்தி மனிதர் மத்தியில் வசித்து நடமாடிப் பிரசங்கித்தபோது "அவர் உவமைகளால் அநேக காரியங்களை அவர்களுக்குப் போதித்தார்" என்று பரிசுத்த சுவிசேஷத்தில் வரையப்பட்டிருக்கிறது.

விதைக்கிறவன் விதைக்கப் புறப்பட்டான். எல்லா விதைகளும் அவன் விதைத்தபோது ஒரே விதமான தரையில் விழவுமில்லை. ஒன்றுக்கு நூறாகப் பலன் கொடுக்கவுமில்லை. சில வித்துக்கள் அதிகம் மண்ணில்லாத கற்பாறை நிலத்திலும், சில முட்களும் செடிகளும் நெருங்கிய இடங்களிலும் விழுந்தமையால், முளையாமலும், முளைத்தும் வளராமலும் எரிந்துபோயின. நல்ல புதிய செழித்த துப்புரவான தரையில் விழுந்த விரைகளே, ஒன்றுக்கு நூறு பலன் கொடுத்தன. அந்நாட்களிற்போல இந்நாட்களிலும் கிறீஸ்துநாதர் மனுஷ ஆத்துமங்களாகிய தரைகளில் தமது விதைகளை விதைக்கிறார். அவர் விதைக்கும் விதைகளில் எல்லாவற்றிலும் உயர்ந்த வித்து, வானத்தில் நின்று இறங்கிய திவ்விய வித்தாகிய அவர் தாமே. அளவற்ற தன்மை உடையதாகிய அவ்வித்துத்தானும் எல்லா ஆத்துமாக்களிலும் ஒரே விதமான பலனைக் கொடுப்பதில்லை. ஏனெனில் எத்தனையோ ஆத்துமாக்கள் பாவ நாட்டமென்னும் முட்களாலும், செடிகளாலும் நிறைந்திருக்கின்றன. இவ்வாத்துமாக்கள் தேவநேசத்தாற் செழிப்புற்ற பூமிகள் அல்ல.

ஆனால் எங்கள் திவ்விய இரட்சகரோ நாம் முற்கூறியபடி நல்ல புதிய செழித்த துப்புரவான தரையையே ஆவலாய்த் தேடித் திரிந்தார். யூதேயா, கலிலேயா என்னும் நாடுகளில் அவர் போதித்தபோது அவ்வித ஆன்ம பூமிகளைத் தேடி அவர் போகாத பட்டினங்களுமில்லை, செல்லாத பட்டிக்காடுகளுமில்லை, கடக்காத மலைகள் குன்றுகளுமில்லை, உறையாத வனமுமில்லை, தாண்டாத கடலும் ஆறுகளுமில்லை, நடக்காத வழிகளுமில்லை. உவமையை நீக்கி வெளிபொருளாய்க் கூறின், அவர் தேடித் திரிந்தது தூய ஆத்துமாக்களையே. பாவிகளை ஆவலாய்த் தேடினார். ஆனால் அவர்களைத் தூயவர்களாக்கவே தேடினார். தூயவர்களைக் கண்டுபிடித்தாரா? ஆம். ஆயின் அப்படிப்பட்டவர்களை அவர் கண்டுகொண்டது, உலகத்தவர்களால் மதித்துத் தெண்டனிட்டு வணங்

கப்பட்ட பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், கற்றபண்டிதர், வேதபாரகர், நியாயதுரந்தரர், மதிமிகும் அமைச்சர், புகழ் மிகும் தளகர்த்தர், செல்வந் திகழும் வர்த்தகர் முதலியவர்கள் மத்தியில் அல்லவே. ஆனால் உலகத்தவர் சிறிதேனும் பறுவாய்பண்ணாத பெலவீனமே உருவான சின்னஞ் சிறுவர்களிலேயே நல்ல நிலமாகிய தூய ஆன்மாக்களைக் கண்டார். கண்டு ஆனந்தங் கொண்டார். தமது திருவிழிகளைப்போலும் அருமையான அப்போஸ்தலரைத்தானும், பேதுரு, யுவாம், தியோகு வைத்தானும் சிறுவர்களுக்குப் பின்னேதான் வைத்து மதித்தார். மோட்ச இராச்சியத்துள் பிரவேசிக்க விரும்பின் இச் சிறுவர்களைப்போல் நீங்களும் ஆகவேண்டுமென்று தமது சீஷர்களுக்கு வற்புறுத்தினார். சிறுவர்களின் இருதயங்களோ அவரை என்றும் ஏற்க ஆயத்தமாய் இருந்தன. அதை அவர் அன்புடன் கண்டு சந்தோஷித்தார்.

## 2

ஒருநாட் சில சிறுவர்கள் தங்கள் தாய்மாருடன் எங்கள் ஆண்டவரண்டை ஓடிவந்தார்கள். யுவாம் ஒருவனைக் கையிற் பிடித்துத் தடுத்தார். தொம்மையார் “ நேரங் கெட்ட நேரத்தில் வந்தீர்களே ” என்று முறுமுறுத்தார். “ இதென்னடா பரிகலங்கள்! வெறுங் கையாய் வந்தார்களே ” என்று யூதாஸ் சினந்தான். தியோகு, “ சத்தம் செய்ய வேண்டாம் பிள்ளைகளே, சற்று விலகுங்கள், போதகர் களைத்து இளைத்து இருக்கிறார் ” என்று சொன்னார். பேதுருவானவரோ தாய்மார் பிள்ளைகள் எல்லாரையும் உறுக்கி விளித்துத் தூர அகலும்படி துரத்தினார். நமது திவ்விய இரட்சகரோ அப்போஸ்தலர்களை மெல்லெனக் கடிந்து, சிறுவர்களை நம்மிடம் வரவிடுங்கள் தடைசெய்யாதீர்கள் என்றார். என்றதும் எல்லாச் சிறுவர்களும் ஆண்டவரைக் கிட்டி வளைந்துகொண்டார்கள். சிலர் அவர் கக்கத்துள் நுழைந்தார்கள். சிலர் அவர் தோளுடன் சாய்ந்தார்கள். ஒருவன் அவர் கைவிரல்களை எண்ணினான். இன்னொருவன் அவர் பாதத்தண்டை இருந்து கல்லும் முள்ளும் கீறிய அவர் பாதங்களைத் தடவினான். ஒரு சிறு குட்டிப்பாலகன் மெல்லென அவர் மடிமேல் ஏறி அவர் மார்பில் சாய்ந்துகொண்டான். அவர்கள் எல்லாரும் அழகானவர்களுமல்ல. எல்லாருடைய ஆடைகளும் துப்புரவானவையுமல்ல. சிலர் குழப்பம் நிறைந்தவர்களாயே இருந்தார்கள். கிலுமொலென்று சத்தமும் சந்தடியும் செய்தார்கள். ஆனால் ஆண்டவர் அவர்கள் இதயங்களையே நோக்கினார் அவர்கள் எல்லாரையும் கட்டி அரவணைத்தார், முத்தமிட்டார், ஆசீர்வதித்தார். தமது மடிமேல் இருந்த சிறுவனைத் தூக்கி நிலத்தில் நிறுத்தி எழுந்து நின்று, தமது சீஷர்களுக்கு அவனைச் சுட்டிக் காட்டிச் சிறுவர்கள்மேல் தமக்குள்ள அன்பு இம்மட்டம்மட்டல்லவென்றும், மோட்ச இராச்சியத்துள் தமது சீஷர்கள் சேர விரும்பினால், அச் சிறுவனைப்போலவே ஆகவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினார்.

பேதுருவானவரும் மற்றும் அப்போஸ்தலர்களும் அதைக் கேட்டு வியப்புற்றாராயினும், ஆண்டவருடைய புத்திமதியைத் தாழ்மையுடன் பின்பற்ற முயன்றிருப்பார்களென்றதற்குச் சந்தேகமில்லை. சிறுவர்களுக்கும், சிறுவர்களைப்போல் உள்ளவர்களுக்குமே மோட்ச இராச்சியம் உரியது என்னும் உண்மையை அன்றுதொடங்கி அப்போஸ்தலர்கள் ஒரு சிறிதாயினும் விளங்கிக்கொண்டார்கள்.



## 3

அப்போஸ்தலர்கள் அன்று கற்ற பாடத்தை ஆதிக் கிறீஸ்தவர்களுக்கும் இனிது ஊட்டி இருப்பார்களென்பது திண்ணம். அதனால் தான் ஆதித் திருச்சபையிலே சவலைகளான சிறுவர்களுக்கும் நற்கருணை என்னும் திவ்விய விருந்து அளிக்கப்பட்டது. அந்தக்காலத்திலே சிறுவர்களை ஆண்டவரண்டை போகாது தடுக்க யாருமே துணியவில்லை. அவர்கள் எங்கள் நேச இரட்சகரின் அருகே ஆவலாய் அழைக்கப்பட்டு அவரின் அருகே யாதோர் தடையுமின்றி வீற்றிருப்பவர்கள்போலானார்கள்.

என்றாலும் காலகதியில் சிறுவர்களைப்பற்றி எங்கள் ஆண்டவர் போதித்த போதனைகளைப் பெரியவர்கள் வரவர மறந்துவிட்டார்கள். பத்தொன்பது நூற்றாண்டுகள் கழிந்தபின் மறுபடியும், எங்கள் இரட்சகர் சிறுவர்களை ஆவலாய் அழைக்கும் இனிய ஓசை உலகமெங்கும் ஒலித்தது. தமது ஸ்தானாபதியாகிய பரிசுத்த பாப்பரசர் பத்தாம் பத்திநாதர் மூலமாய் “ சிறுவரை நம்மிடம் வரவிடுங்கள். தடைசெய்யாதீர்கள் ” என்று கூவி இரந்து அழைத்தார். அக்குரலைக் கேட்டதும் அநேக நூற்றாண்டுகளாய் சிறிய பிள்ளைகளுக்கு நற்கருணை கொடுக்க இருந்த தடைகள் யாவும் நீங்கிவிட்டன. குருக்களும், தாய்மாரும், உபாத்திமாரும், பரிசுத்தபிதாவுடைய அழைப்பைச் சிரமேற்கொண்டு சிறியவர்களை ஆண்டவரண்டை கூப்பிட்டுச்செல்வதற்கு அந்நாட்தொட்டு இந்நாள்மட்டுமே போதிய பிரயாசை செய்துவருகின்றனர்.

அந்நாட்தொட்டு எங்கள் ஆண்டவருடைய நேச இதயத்துக்கு நற்கருணைமூலமாய் அநேகம் பிள்ளைகள், அதிகம் ஆறுதலை அளித்து வருகிறார்கள். அம்மட்டா? நற்கருணையில் வைத்த அன்பு சுவாலிக்கும் பத்திமுகாந்தரமாய் எத்தனையோ சிறுவர்கள் நாம் பிரமிக்கும்படியான அர்ச்சியசிஷ்டதனத்தை அடைந்து, சாங்கோபாங்கமென்னும் மலையின் அதி உன்னதமான கொடுமுடியைத்தானும், தங்கள் சிறிய பாதங்களால் கெதியே எதிர்ச்சேர்ந்தார்கள். அதி வண. எஸ். ஆசீர்வாதம் சுவாமியார் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட சின்னமலர் அம்மாள் சரிதை, கீத பொன்கலன் சரிதை, இவை முதலான சரிதைகள் இதற்குத் தப்பாத சான்றுகளாகும். அவ்விதமே இச்சிறிய புத்தகத்திற் கூறப்பட்டிருக்கும் பீற்றர் என்ற சிறிய பிள்ளையின் சரிதையும் அதற்குக் குன்றாத அத்தாட்சியாகும்.

ஆனதினால் அருமையான சிறிய நண்பர்காள்! இப்பேர்ப்பட்ட சரிதைகளை நீங்கள் விருப்பமுடன் வாசித்தால், உங்கள் இதயங்களிலும் சற்பிரசாதநாதரில் உள்ள அன்பு வரவர வளர்ந்து, அதனால் நீங்களும் தேவநேசத்திலும், புண்ணிய நெறியிலும் ஏற்றமடைந்துகொண்டேபோவீர்களென்பது திண்ணம்.

# முதலாம் பாகம்

## சரித்திர ஆரம்பம்

### 1

இந்தப் பூமியிலுள்ள அநேக கத்தோலிக்க தேசங்களுள் நமது சுத்த சத்தியவேதம் மிகவும் பலித்தோங்கி வளர்ந்து, நறுமணங் கமழும் தரும மலர்களையும், நமது திவ்விய இரட்சகருக்குப் பிரியமான இனிய புண்ணியக் கனிகளையும் அதிகமாக அளித்து வருவது, சீரும் சிறப்பும் நிறைந்து திருச்சபையின் மூத்த குமாரத்தியென்று நாமதேயஞ் சூட்டப்பட்ட செல்வம் சொலிக்கும் பிராஞ்சுதேசமே என்று கூறின், எவரும் அதை மறுக்கத் துணியமாட்டார். எங்கள் ஆண்டவராலும், அவர் நேசத் தாயாராலும் ஏராளமாக ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் பிராஞ்சுதேசத்திலே, செயின் மாலோ என்ற பட்டணத்திலே, 1905-ம் வருடத்திலே இச்சரிதையின் கதாநாயகமாகிய சிறிய பீற்றர் பிறந்தார். பரலோக இன்பம் பெருகி வழிந்துகொண்டிருக்கும் இப் பாலகனின் அரிய சரிதை, இச்சிறிய புத்தகத்தில் ஆங்கிள பாஷையிலிருந்து மொழிபெயர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. இப்பாலகன் மரிக்கும்பொழுது அவருக்கு வயது எட்டு: இச் சொற்பவயதுட்தானும், சின்னஞ் சிறிய பீற்றர் சாங்கோபாங்கநெறியில் பென்னம் பெரிய அர்ச்சியசிஷ்டர்களுக்கு இணையுள்ளவராகிவிட்டாரென்று நினைக்கும்பொழுது, தேவவரப்பிரசாதத்தின் அற்புத செயல்கள் எவ்வளவு மகத்துவமானவைகளென்று நம்மனதுட் தைக்காதுவிடா.

சிறிய பீற்றரின் சரிதை ஒரு உபகதையல்ல. உண்மையாகவே நிகழ்ந்த சரிதை. இது மூலபிரதியில் பிராஞ்சுப்பாஷையில் யேசுசபைக் குருக்களுள் ஒருவராகிய அல்பேட் பெசியேற் சுவாமியார் அவர்களால் எழுதிவைக்கப்பட்டது. ஆயினும் மற்றும் சரித்திர ஆசிரியர்களைப்போல் இதை தாமே எழுதாமல், சிறிய பீற்றர் ஒரு குருவானவருக்கு ஒரு வருஷமாக எழுதின கடிதங்களை, ஒரு மாற்றமுமின்றிச் சில முற் குறிப்புடன் பிரசுரஞ் செய்திருக்கின்றார். இச் சிறிய சரிதையைப் படிப்போர், அக்கடிதங்களையே வாசித்து, அவைகளிலிருந்தே சிறிய பீற்றரின் சீவிய சரித்திரத்தையும், அந்தச் சின்னஞ் சிறிய பாலகனின் ஆத்துமத்தினது அலங்கிர்த சோபனத்தையும் கண்டறிந்து ஆனந்தத்தில் மூழ்வோராவார்கள்.

சிறிய பீற்றரினது தந்தையின் நாமம் ஏய்றேல். அவர் பிராஞ்சிய பட்டாளத்திற் தளபதி உத்தியோகம் வகித்திருந்தார். கல்வி கேள்விகளிற் சிறந்தவரும், நற்குடிப்பிறப்பும், நாகரீகமும் உள்ளவராயினும் தேவபத்தி சற்றுமேயில்லாதவர். ஞானஸ்நானம் பெற்றதால் ஓர் கத்தோலிக்கனாயினும், தனது வேதவிசுவாசத்தை முற்றுமே இழந்து, தேவனென்ன, குருவென்ன, கோயிலென்னவென்று நிந்தைசெய்யும் பாவி



யாகி, இருபது வருஷ காலமாக யாதோர் வேத அனுசாரமுமின்றிச் சீவித்துவந்தவர்.

சிறிய பீற்றருக்கு யோண் என்று ஒரு தமயனாரும், ஓடேற்றென்று ஒரு தங்கச்சியுமிருந்தார்கள். இவர்களின் தாயாகிய ஏய்றேல் அம்மா தேவபக்தியும், வேதவிசுவாசமும் நிறைந்த மகா புண்ணியவதி. இவருடைய உதரத்தில் நின்று உதித்த மூன்று பிள்ளைகளையும் மிகப் புத்தி விமரிசையுடன் தேவபத்தி நிறைந்தவர்களாய் வளர்ப்பதில் என்றும் கண்ணும் கருத்துமுடையவராக இருந்தார். ஆனால் தாய்க்கும் பிள்ளைகளுக்கும் என்றுமே தொலையாத ஒரு பெரும் கவலை இருந்தது. அது யாதெனில் தங்கள் தகப்பனாரின் பரிதாபமான விசுவாசமற்ற பாவநிலையாகும்.

பீற்றர் தனது தந்தையின் நிலையையிட்டு யோசித்தார். எதுவிதமும் தனது தகப்பனை நரகக்கூளியின் கையிலிருந்து பறித்தெடுத்து ஆண்டவரிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று தனது மனதுட் தீர்மானம் செய்துகொண்டார். அவர் என்னென்ன ஆச்சரியமான புண்ணியங்களைப் புரிந்து ஈற்றிலே தனது அருமையான உயிரையும் சருவேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்துத் தனது தந்தையின் ஆத்துமத்தைப் பிசாசின் அடிமைத்தனத்திலும், எரி நரகில் விழும் அபாயத்திலும் இருந்து எவ்விதம் மீட்டார் என்று அறிய விரும்புவோர் அவரால் எழுதப்பட்ட கடிதங்களைக் கவனமாய்ப் படித்துப் பார்த்தல் வேண்டும். ஒருவன் இன்னொருவனுக்காகத் தனது உயிரைக் கொடுப்பதிலும்பார்க்க மேலான சிநேகம் உலகில் இல்லையென்று நமது திவ்விய இரட்சகரே செப்பியிருக்கிறார். அதனால்தான் சிறிய பீற்றரின் சீவிய சரிதை நம் எல்லவரையும் பிரமித்துத் தலைவணங்கச் செய்யும் ஆச்சரியம் நிறைந்த சரிதையாகின்றது. இச் சிறிய பிள்ளையின் ஆத்ம தைரியத்தினதும் பரித்தியாகத்தினதும் இரகசியம் எதிற் தங்கி இருந்தது? அதை அறிவதுதான் முக்கியம்.

### 2

சென் மாலோ என்ற பட்டணத்துக்கு அருகாமையிற் புற்தரைகளும், மைதானங்களும், பூந்தோட்டங்களும், கனிவிருட்சத் தோப்புகளும் அங்குமிங்குமிருந்தன. சிலவிடங்களிற் சதுப்புநிலங்களுமுண்டு. சதுப்புநிலங்களில் சிறு நீர்க்குழிகள் சூரிய வெளிச்சத்தில் பளபளென இலங்கும். அவைகளின் அருகாமையிற் சிற்றருவிகள் சலசலெனப் பாயும். இவைகளின் அருகாமையில் சிறு பற்றைகள் இடை இடையே அடர்ந்திருக்கும். கோடைகாலத்திலோ இவ்விடங்கள் யாவும் பலநிறப் புஷ்பங்களால் மலர்ந்து தேங்கும். தேங்கும்அந்நாட்களில் பூக்களைத் தேடிப் பொன்னும், மஞ்சளும், நீலமும், இன்னும் பலவர்ண நிறமுடையனவுமான வண்ணாத்திப்பூச்சிகள் அங்கு மிங்கும் பறந்துகொண்டிருக்கும். தேனீக்களும், தும்பிகளும், பலவித வண்டினங்களும், இரைந்து, ஊதி, ரீங்காரம் செய்து, கிண்கிணு, கிணுகிணுவெனத் தங்கள் சப்தத்தால் அவ்விடங்களைத் தேங்கச் செய்யும். அவ்வேளைகளில் சிறிய பீற்றரை அந்த இடங்களிலெல்லாம் காணலாம். தனது கண்ணுக்குத் தைத்ததும், தனக்குத்

தேவையானதுமான வண்ணாத்தி முதலிய பூச்சிகளைத் தனது உடல்வெயர்க்கக் களைக்கக் கல்லுகள், முள்ளுகள், பற்றைகள், நீர், சகதி ஒன்றையும் பறுவாய்பண்ணாது, கலைத்துப் பிடித்து ஒருமட்டையில் இனமினமாகக் குற்றிவைத்துக்கொள்ளுவார்.

நமது தேசப் பிள்ளைகளுக்கு இது ஏனென்ன விளங்காது இருத்தல் கூடும். சற்றே விளங்கச் சொல்லுவோம்.

மேலைத் தேசத்திலே (சீமையிலே) சின்னவயதிலேதானும் சிறுவர் தங்களைச் சுற்றவிருக்கும் சிருட்டிகளைப்பற்றி அறிவதற்குப் பயிற்றப்பட்டுவருவார்கள். சில சிறுவர் புல், பூண்டு, பூக்கள் முதலியனவற்றைச் சேர்த்து, அவைகளை இனமினமாக வகித்து, அவைகளைப்பற்றிப் படிக்கவேண்டியவைகளைச் சிரமமாய்த் தேடி அறிவார்கள். புத்தகத்தில் வாசிப்பதோடு மனத்திருத்தி அடையார்கள். இவ்விதமே இன்னுஞ் சிலர் பூச்சிகள், புழுக்கள், வண்டுகள் முதலியவற்றைத் தேடிப் படிப்பார்கள். அவைகளை இனமினமாகச் சேர்த்து, அறைகளில் வைப்பார்கள். அவைகளின் ரூபங்களைப் படமாக எழுதுவார்கள். இச்சரிதையின் நாயகமாகிய பீற்றரும் தனது விளையாட்டு நேரத்தை இவ்விதமான முயற்சியிலே ஆவலாய்க் கழித்துவந்தார்.

ஆனால் வண்ணாத்திப்பூச்சிகள் அருமையான காலங்களில், பீற்றர் சதுப்புநிலங்களையும் தோப்புகளையும் விட்டுக் கடற்கரைக்குப் போவார். அங்கே வற்றுநேரத்தில் கற்பாறைகளுள் அங்கு மிங்கும் சின்னச் சென்னிறக் கூனிகளும், இறால்களும், ஞெண்டுகளும் ஓடித்திரியும். பீற்றர் தன் முதுகில் ஓர் சிறு பறியுங்கொண்டு வெறுங் கால்களுடன் ஓடியுலாவி அவைகளைப் பிடிப்பார்.

மேற்கூறியவைகளிலிருந்து சிறிய பீற்றரின் நேரமெல்லாம் இவ்விதமாகவே விளையாட்டிலும், முஸ்பாத்தியிலும் கழிந்தனவென்று விளங்குதல் தவறாய் இருக்கும். கவனத்துடனும், கிரமமாகவும் செய்யவேண்டிய வேலைகள் இவருக்கு இருந்தன. கூட்டவும், கழிக்கவும், கணிதங்கள் பல செய்யவும், வாசிக்கவும், வாசகம் எழுதவும், இலக்கணம், பூமிசாஸ்திரம் முதலியவைகளைக் கற்கவும் குறிக்கப்பட்ட நேரங்கள் இருந்தன. வீட்டிற் படித்தபின் பாடசாலைக்குச் சென்று அவைகளையெல்லாம் உபாத்தியாயருக்கு ஒப்பிக்கவேண்டியவராய் இருந்தார். அதனால் ஒவ்வொருநாளும், ஒரு குட்டிக் கப்பற்காரனைப்போல் உடுத்திக்கொண்டு தனது தொப்பியையும் கக்கத்துள் இடுக்கிக்கொண்டு, சற்றுத்தூரமிருந்த தனது பாடசாலைக்கு, புஸ்தகப் பையுடன் வெகு பரபரப்பாய் மணற்தெருக்களால் நடந்து செல்லுவார். அவ்வேளையில் அவருடைய காவற்சம்மனசே அவர்க்குத் தோழனாவர்.

இவ்விதமாகவே பீற்றரின் நாட்கள் கழிந்துவரும்பொழுது தேவதாயாரின் சுத்திகரத் திருநாளன்று அவ்வருஷம் அப்பிள்ளைக்கு ஏழுவயது தொடங்கியது. அத்தினங் கழிந்து கொஞ்சநாட்களுள் அந்தப் பட்டினத்தில் ஓர் மகா ஞான ஒடுக்கம் போதிக்கப்படவேண்டி இருந்த-



மையால், பாவிகளை மனந்திருப்புவதற்காகச் சிறுவர்களின் மன்றாட்டமே விசேடம்பெற்றதென்று குருமார் உணர்ந்தார்கள். ஆதலால் கூடுமான சிறுவர்களைச் சேர்த்து, ஆயத்தப்படுத்தி, அவர்களுக்கு முதற்சற்பிரசாதம் கொடுத்துப், பாவிகள் மனந்திரும்பும்படியாக அவர்கள் செபஞ்செய்யும்படி ஏவப்பட்டார்கள். அச் சிறுவருள் பீற்றரும் ஒருவர்.

முதற் சற்பிரசாதத்தன்று பீற்றரின் இதயத்தில் ஆழப் புதைந்த தேவவித்தாகிய எங்கள் யேசுஇரட்சகர் இவருடைய ஆத்துமத்தை எவ்விதமாக அலங்கரித்துத் தமது வரப்பிரசாத மலர்களாலும் கனிகளாலும் பரிபூரணமாய் நிறைத்துவிட்டாரென்பதைச் சிறிய பீற்றர் எழுதிய கடிதங்களிலிருந்து நன்றாய் விளங்குதல் கூடும். அந்தக் கடிதங்கள் முன் கூறப்பட்ட ஞான ஒடுக்கத்தைப் போதித்த குருக்களுள் ஒருவருக்கு, ஞான ஒடுக்கம் முடிந்த காலந்தொட்டு அவரால் எழுதப்பட்டவையே. அக் குருவானவர் அவைகளை ஞானத் திரவியங்களாகப் பாவித்துச், செப்பமே சேகரித்துவைத்திருக்கிறார்.

சிறிய பீற்றரின் சரிதை அக் கடிதங்களுள்ளேயே புதைந்துகிடக்கிறது. எக்காலமும் அவைகள் குன்றாத்திரவியமென்பதையும், விலையேறப்பெற்ற மங்கா ரத்தினக் கட்டிகளென்பதையும், இதன் பின்னால் இரண்டாம் பாகத்தில் அச்சிடப்பட்டிருக்கும் அக் கடிதங்களைக் கவனமாய் வாசித்துப்பார்ப்போர் இலகுவில் விளங்கிக்கொள்வர். அதனால் அவர்கள் சொல்லொணா ஞான இன்பத்தையும் சுகிப்பர் என்பதற்குக் கிஞ்சித்தேனும் ஐயமே இல்லை.

# இரண்டாம் பாகம்

## சிறிய பீற்றரின் கடிதங்கள்

சித்திரை 1912.

அருமைப் பிதாவே,

உமது நற்கருணைப் பந்தி அங்கத்தவருள் ஆகச் சிறியவனாகிய பீற்றராகிய நான் உமக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன். என்னைப்பற்றிய சில செய்திகளை உமக்கு அறிவிக்க நான் ஆவலாய் இருக்கிறேன். பெரிய ஞான ஒடுக்கத்தைத் தாங்கள் இங்கு போதித்துச் சென்றதன்பின், பிதாவே அதிகமாய் உம்மைப்பற்றி நான் நினையாத நாள் ஒன்றுமேயில்லை.

சுவாமி நீர் இவ்விடம் விட்டுப் புறப்பட்ட அன்று காலமே, இவ்விடத்துப் பெரிய மனிதர் எல்லாரும் தம்மைப் பயணம் அனுப்பப் புகைரத ஸ்தானத்துக்கு வந்ததாக எனக்குச் சொன்னார்கள்.

நானும் அவ்விடம் வந்து சுவாமியைப் பயணமனுப்ப வெகு ஆவலாய் இருந்தேன். ஆனால் நான் ஆக ஒரு ஏழு வயதுச் சிறுவனென்றபடியால் ஒருத்தரும் அதைப்பற்றி எனக்கு அறிவிக்கவில்லை. மாரிகாலத்திற்போலவே இப்போதும் அம்மா என்னை 8 மணிக்கு நித்திரைக்கு அனுப்பிவிடுவா. திங்கட்கிழமையோடு என்னுடைய பள்ளிக்கூட விடுதலை நாட்கள் முடிந்தன. என்னைப் படிப்பிக்கும் லூயிஸ் சுவாமியாருக்கு இப்போது என்னிலே நல்ல பிடிப்பாம். ஏனென்றால் நான் நல்லாய் வேலைசெய்கிறேனாம். நான் ஒவ்வொருநாளும் சற்பிரசாதம் பெறுகிறபடியினால், ஒவ்வொரு நாளும் நான் நன்றாய்ப் பிரயாசப்பட்டுப் படிக்கவேணுந்தானே. என்றாலும் நான் செய்கிற கணக்குகளெல்லாம் சரிவருகிறதில்லை. சிலது பிழைத்துத்தான் போகிறது. வாசகத்திலும் இன்னும் பிழைகள் விடுகிறேன். என்றாலும் வரவர அப்பாடத்தில் நான் தேர்ச்சி அடைகிறதை என்னுடைய கடிதங்களே உமக்குக் காட்டும். இவ்விதமே நற்கருணைப் பந்தியின் நல்ல ஒரு அங்கத்தவனாய் இருக்க நான் தெண்டிப்பேன். அருமைப் பிதாவே நான் எங்கள் நல்ல ஆண்டவரை அதிகமதிகமாய் எனது முழு மனதோடும் நேசித்தால் அவர் என்னைக் கட்டாயம் ஆசீர்வதிப்பார், அல்லவா சுவாமீ? ஆண்டவருக்கு அதை நான் ஒவ்வொருநாளும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

சுவாமி நீர் இவ்விடம் விட்டுச் சென்றபின் ஒரே ஒருநாள் மாத்திரம் நான் சற்பிரசாதம் வாங்கத் தவறிவிட்டேன். அதைப் பொறுத்துக்கொள்ளும். அது எனது குற்றமல்ல. நான் நேரத்துடன் கோயிலுக்குச் சென்றேன். ஆனால் அன்றைக்கு அங்கு பூசை இருக்கவில்லை. அன்றைக்கு அங்கே ஒரு பிரேத அடக்கச் சடங்கு நடக்க இருந்ததினால் என்னை ஒருவரும் கவனிக்கவில்லை. ஏனென்றால் நான் ஒரு சின்னஞ்சிறியவனாயிற்றே.



எங்களுடைய சற்பிரசாதப் பந்தியில் முதலாம் வகுப்பிற்குச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருநாளும் நற்கருணை பெறுவார்கள். எனது அண்ணன் யோண் என்னைப்போலவே அப்பந்தியின் முதல்வகுப்பிற் சேர்ந்து இருக்கிறார். நான்தான் அவரை அப்படிச் செய்யும்படி ஏவிவிட்டேன். எனக்கு அதனால் வெகு சந்தோஷம். ஏனென்றால் அநேக சிறுபிள்ளைகள் ஒவ்வொருநாளும் நற்கருணையிலே ஆண்டவரை உட்கொள்ளுவதனால், எங்கள் சின்ன ஆண்டவர் வெகு சந்தோஷமாய் இருக்கிறார்.

வீட்டிலே இப்போது நான் முன்னேபோலத் துடியாட்டம்பண்ணுகிறதில்லை. என்றாலும் இடைக்கிடை அப்பு எனக்கு நல்ல பேச்சுக்கொடுப்பார். ஏனெனில் சாப்பிடும் மேசையைவிட்டு உத்தரவின்றி அதி சீக்கிரம் எழும்பிவிடுவேன். எனது தங்கச்சி ஒடேற்றுடனும் சிலவேளை கொஞ்சம் சண்டைபிடித்துக்கொள்ளுவேன். இக் குற்றங்களுக்காக எனக்குச் சவுக்கடிதான் கிடைக்கவேணும். என்றாலும் இன்னும் எனது பெற்றார் எனக்கு அப்படிச் செய்யவில்லை. இனிமேலும் அதற்கு நான் தப்பிக்கொள்ளுவேனென்று நம்புகிறேன்.

சிறிய பீற்றர்.

---

சித்திரை......

அருமைப் பிதாவே,

நான் உமக்கு இந்தக் கடிதத்தை எழுதுவதும், அதில் எனது அருமையான யேசுநாதரையும் அவர் திருத்தாயாரையும் அதிகமதிகமாக நேசித்துவருகின்றேன் என்று வரைவதும் எனக்குப் பெரிதும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஆனால் அவர்கள் என்னை அவ்வளவாக நேசிக்கிறார்களோ என்றதைப்பற்றி எனக்குச் சற்றே சந்தேகம் உண்டு. ஏனெனில் என்னிலே அநேகம் குற்றங்கள் உண்டு. அம்மா இதை உமக்குச் சொல்லும்படி எனக்குக் கற்பித்தார். நான் எப்போதும் அமைச்சலாய் நடக்கிறதில்லை. எனது தங்கச்சி ஒடேற் உடன் சச்சரவுபடாமல் அவளைச் சும்மா விடும்படி சொன்னாலும் சில தருணங்களில் அதை மீறிநடப்பேன். ஒருமுறை நாங்கள் இருவரும் சிறுகச் சண்டையும் பிடித்துக்கொண்டோம். ஆனால் இனிமேல் நான் அப்படிச் செய்யமாட்டேன். இதைப் பிதாவே உமக்கு வாக்குப்பண்ணுகிறேன். நான் மிகவும் சோம்பேறியாய் இருக்கிறேன். ப்லமுறையும் இலக்கணப்பாடத்தில் வேற்றுமைகளைப் படிக்கவேண்டி இருந்தால் மூஞ்சியை நீட்டிக்கொள்வேன். சில தருணங்களில் உபாத்தியாயினியுடைய வார்த்தைக்கு எதிர்வார்த்தையும் சொல்வேன். விருத்துக் குடிக்கவேணுமென்றும் மீன் சாப்பிடவேணுமென்றும் சொல்லப்பட்டால் குழப்பம்பண்ணுவேன். இவைகள்தான் எனது குற்றங்கள். அநேக குற்றங்கள் என்னில் உண்டு. ஆனால் அவை எல்லாவற்றையும் உடனே திருத்தி நடக்க நான் பிரயாசப்படுகிறேன். அப்போதுதான் நான் ஒவ்வொரு காலமேயும் திவ்விய நற்கருணை அருந்தும்பொழுது சின்ன யேசு என்னில் சந்தோஷம்கொள்ளு

வார். நான் செப அப்போஸ்தலர் சபைச் செபத்தை மனப்பாடமாய்ப் படித்துக்கொண்டேன். காலமே நித்திரைவிட்டெழுந்தவுடன் ஒவ்வொருநாளும் அச்செபத்தைச் சொல்லுவேன். அவ்விதமாக முழுத்தினத்தையும் திவ்விய இருதயத்துக்காகவும் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காகவும் செலவழிப்பேன். பூசைநேரத்தில் ஒரு முழுச் செபமாலை சொல்லிமுடிப்பேன். முதற்காரணிக்கத்தைச் செப அப்போஸ்தலர்சபையின் கருத்துக்காகவும், இரண்டாவதை பாப்பானவருக்காகவும், மூன்றாவதை எனது அப்புவுக்காகவும், நாலாவதை எனது அம்மாவுக்காகவும், ஐந்தாவதை யோணுக்காகவும் ஒடேற்றுக்காகவும் எனக்காகவும் சொல்லுவேன், ஒவ்வொரு காரணிக்கத்தின் பின்னும் அம்மா எனக்குப் படிப்பித்துத் தந்த இந்தச் சிறிய செபத்தைச் சொல்லுவேன்: "சின்ன யேசுவே என்னை மிகவும் பெரியவனாகவும், மிகவும் நல்லவனாகவும் வளரப்பண்ணும்.: எனது அப்புவையும், அம்மாவையும், யோணையும், ஒடேற்றையும் எல்லாரையும் ஆசீர்வதித்துக் காத்தருளும்" என்பதுவே நான் செய்யும் செபம்.

சிறிய பீற்றர்.

குறிப்புகள்:—ஒவ்வொருநாளும் அதிகம் அதிகமான பிள்ளைகள் நற்கருணைப் பந்தியிற் சேருகிறார்கள். எல்லாருடைய நாமங்களையும் என்னுடைய டாப்பிலே எழுதிவைத்திருக்கிறேன். அவர்களில் 10 பேர் ஒவ்வொரு காலமேயும் நற்கருணை உட்கொள்ளுவார்கள். 8 பேர் கிழமையில் இரண்டு முறை உட்கொள்ளுவார்கள். 30 பேர் ஒவ்வொருஞாயிற்றுக்கிழமையிலும் உட்கொள்ளுவார்கள். நாங்கள் எல்லாரும் சற்பிரசாதப் பந்திக்கு ஒரே கூட்டமாய்ப் போவோம். ஒருவனாவது தனது நற்குண முத்திரையை இழந்துவிடவில்லை. பூசையின்பின் அப்பீத்தைகளையும், பாட்டுப்புஸ்தகங்களையும் நான் திரும்ப ஒன்றாய்ச் சேர்த்துவைத்துக்கொள்ளுவேன். என் முழு இருதய அன்புடனும் உம்மை அரவணைத்து முத்தமிடுகிறேன்.

உமது சின்ன லிகிதர்

பீற்றர் ஏய்றேல்.

---

வைகாசி...

அருமைப் பிதாவே,

நான் ஒவ்வொருநாளும் நற்கருணை பெறுவது தகாதென்று எனது பேத்தியார் என்னை உறுக்கி ஏசினார். அவர் என்னிலும் எவ்வளவோ வயதில் கூடினவரானாலும், ஒவ்வொருநாளும் நற்கருணை உட்கொள்ளுவதில்லை. "நீ அப்படிச் செய்வதற்குப் போதிய புண்ணியவாளனல்ல" என்று அவர் எனக்குச் சொன்னார். நான் சுவாமி நீர் எனக்குச் சொல்லித்தந்த மறுமொழியைச் சொல்லிவிட்டேன். "பெத்தாச்சி, நான் திவ்



விய நற்கருணை உட்கொள்ளப்போவது, நான் புண்ணியவாளன் என்றபடியால் அல்ல, ஆனால் புண்ணியமுள்ளவனாக வரும்படியே. என்னால் கூடியளவு கிரமமாய் நடப்பேன்" என்று பெத்தாவுக்குச் சொன்னேன். இப்போது அதையிட்டு அவரால் நமக்கு யாதொரு தொந்தரையுமில்லை. காலையில் மற்றவர்களுக்கு முன் நான் தனியே எழும்பிவிடுவேன். நான் எனது சப்பாத்துக்களைப் போடும்பொழுது, யோண் எனக்கு உதவிசெய்வார். பின்பு நாங்கள் இருபேரும் சத்தமில்லாமல் மெல்லென மேல்வீட்டுப் படிகளால் இறங்கிப் பூசைக்குப் போவோம். சத்தமாய் நடந்தால் அப்புவுடைய நித்திரை குழம்பிப்போய்விடும். "அப்பு நீங்கள் உங்களுடைய பாஸ்குக் கடமைகளை நிறைவேற்றவேணும்" என்று அவருக்கு எப்போதும் சொல்லுவேன். ஆனால் அவரோ அப்படிச்செய்வதுமில்லை. ஒருக்காலும் செபம்பண்ணுவதுமில்லை. ஒவ்வொருநாளும் எனது நல்ல தேவனை நோக்கி அப்புவை மனந்திருப்பவேணுமென்று இரந்து மன்றாடுகிறேன். தனிமையாய் இருக்கும் வேளையில் அப்புவுடைய நிலைபரத்தை நினைத்து அழுவேன். அவரை விட்டு நான் தனியே மோட்சம் போவது எவ்வளவு துக்கமான காரியம். சுவாமீ! பாஸ்குக்கடமையைத் தீராதவர்கள் மற்றவர்களுக்குத் துன்மாதிரியான பெரிய பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள் என்று நீர் ஒருமுறை சொன்னீரே. அதை நான் அப்புவுக்குச் சொன்னேன். ஆனால் அவர் என்னை வாய்பொத்தும்படி சொன்னார். அவருக்காக மன்றாடும். உம்மைக் கட்டி அரவணைத்து இத்தை முடிக்கிறேன்.

சின்னப் பீற்றர்.

---

ஆனி...

அருமைப் பிதாவே,

"யேசுக்கிறீஸ்துநாதர் தேவன் அல்ல. அவர் மற்ற மனிதரைப் போலும் ஒரு சாதாரணமான மனிதன் தான்" என்று சாப்பிடும்வேளையில் அப்பு சொன்னார். நான் அழுதுகொண்டு "இல்லை, இல்லை, அவர் தேவன், சுவாமி அப்படிச் சொல்லி இருக்கிறார்" என்று சொன்னேன். யோணும் என்னைப்போலவே சொன்னார். தங்கச்சி ஒடேற் உடனே கதிரையின்மேலேறி நின்றுகொண்டு, தனது கைகளை அறைந்து "அவர் தேவன்! அவர் தேவன்! சுவாமி அப்படிச் சொல்லி இருக்கிறார்" என்றாள். ஞானஒடுக்கம்செய்தபொழுது நாங்கள் எங்களுடைய பெற்றாருக்குப் புத்தி போதிப்பது தகாதென்றும், அதையிட்டு அவர்களுக்காகச் செபம் செய்து, ஒறுத்தல்களை அனுசரிப்பதே மிகவும் நல்ல மாதிரியென்றும் பலமுறையும் நீர் புத்திகூறி இருந்தீரே. ஆனபடியால் ஒவ்வொரு பின்னேரமும் எனது கட்டிலின் அருகில் நான் செபமாலை ஓதி, ஒவ்வொரு காரணிக்கத்தின்பின்னும் "சின்ன யேசுவே எனது அப்புவை மனந்திருப்பியருளும்" என்று வேண்டிக்கொள்ளுவேன். சீனிமிட்டாய் முதலிய இனிய பதார்த்தங்கள் எனக்குக் கிடைக்கும்பொழுது, அரைவாசியைச் சாப்பிடாமல் வைத்துச் சனிக்கிழமை பிச்சைக்கு வருபவர்களுக்குக் கொடுத்து, அப்புவுக்காக மன்றாடும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளுவேன்.

உமது சின்னப் பீற்றர்.

ஆடி......

சுவாமீ! உமக்கு நல்ல ஒருசங்கதி சொல்லப்போகிறேன். இப்போது ஒவ்வொருநாளும் அம்மா என்னுடன் தேவநற்கருணை உட்கொண்டுவருகிறார். முன்னே ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் சற்பிரசாதம் பெறுவார். அதை நான் கவனித்து "அம்மா, அப்பு மனந்திரும்பும்படியாக நீங்கள் ஏன் ஒவ்வொருநாளும் சற்பிரசாதம் பெறுவதில்லை," யென்று கேட்டேன். ஒரு மறுமொழியும் சொல்லாது அவர் என்னைக் கட்டி அரவணைத்தார். ஆனால் மறுநாட் காலமே தொடங்கி யோணும் அவரும் நானும், ஒவ்வொருநாளும் சற்பிரசாதம் உட்கொள்ளுகிறோம். ஆ! இதை நினைக்கும்பொழுது எனக்கு எவ்வளவோ சந்தோஷமாய் இருக்கிறது. நாங்கள் அப்புவை மனந்திருப்புவது நிச்சயத்தில் நிச்சயம்.

பீற்றர்.

---

ஆவணி......

அருமைப் பிதாவே!

இப்போது என்னுடைய பள்ளிக்கூட விடுதலை தொடங்கி இருக்கிறது. அதை நான் எவ்வளவோ ஆவலாய்க் காத்திருந்தேன். நாங்கள் ஊரைவிட்டுக் கடற்கரையை அண்டி நாட்டுப்புறமாய்ப் போயிருக்கிறோம். நேற்று நான் 120 இறால்கள் பிடித்தேன். எனது அண்ணன் யோண் 160 பிடித்தார். தங்கச்சி ஒடேற் அவைகளைச் சமைத்துத் தந்தாள். பின்பு நாங்கள் அவைகளைக் கற்பாறைகளிலிருந்து சாப்பிட்டோம். அதன் பின்பு எங்களுக்கு ஒரு பிசாசு மீனும் ஒரு பெரிய சிவத்த் ஞெண்டும் அகப்பட்டன. நாங்கள் அவைகளை ஒன்றுடனொன்று சண்டைபிடிக்க விட்டுப்பார்த்தோம். ஞெண்டு வென்றுவிட்டது. பிசாசு மீனோ தோல்வி அடைந்தது. வீட்டிற்குத் திரும்பிவரும்பொழுது கந்தை உடுத்திய ஓர் சிறு பையனை வழியில் கண்டேன். அவன் மிகவும் சின்னப் பையன். அப்பு அணியும் உயர்ந்த சப்பாத்தளவு இருப்பான். அவன் தனது தோளிலே தன்னிலும் பாரமான ஒரு பை நிறையப் பழங் கடுதாசிகள் சுமந்து வந்தான். அந்தவேளை அதிகம் மழையும் குளிருமாயிருந்தது. பையனோ வெறுங் காலுடன் சென்று இங்கு மங்கும் தெருநீளம் இடையிடையே இருந்த குப்பைப் பெட்டிகளைப் பழங்கடுதாசி எடுப்பதற்காய் ஆராய்ந்து கொண்டுநின்றான். அவனிலும் பெரிய பையன்கள் மூவர் அவனிற்பாய்ந்து அவனுடைய பையைக் கிழிக்க எத்தனித்தார்கள். சிறு பையனோ அழுது கொண்டு ஓடினான். ஆனால் அந்த இரக்கமற்றவர்கள் அவனுக்குக் கல்லால் எறிந்தார்கள். நானோ உடனே அம்மூவரிலும் பெரியவனைத் தாக்கிக், கைக்குத்துமற்சண்டையில் நான் கற்றிருந்த வித்தைகள் யாவற்றையும் அவன் நன்றாய் உணரும்படி அவனுக்கு நல்ல இடி கொடுத்தேன். சரியான பூசைவாங்கி அதன்பின்னர் என்னுடன் நின்றுபிடிக்கமாட்டாதவனாய் அவன் ஓட்டமெடுத்தான். மற்ற இருவரும் அவனுக்குப் பின்னால் ஓடினார்கள். பின்பு நான் அந்த ஏழைச் சிறுவன் கிட்டப்போய்



"உன் பெயரென்ன?" என்று கேட்டேன். "என் பெயர் ஸோ ஸோ" "நீ இருக்கிற இடமெது" "பாலத்துக்குக் கிட்ட" "உனது சப்பாத்துகள் எங்கே"? "எனக்குச் சப்பாத்துகள் இல்லை" "அப்போ வீட்டேவா. அம்மா உனக்குச் சப்பாத்துகள் கொடுப்பார்" "எனக்கு அம்மா இல்லை" "என்னுடைய அம்மா உனக்குக் கொடுப்பார் என்றதுதான் என் கருத்து. வா" என்று சொல்லி நான் அச்சிறுவனை எங்கள் வீட்டுக்குக் கூட்டிச் சென்றேன். அம்மா அவனுக்கு எனது பழைய சப்பாத்துகள் ஒருகூட்டமும், ஒரு கேக்கும் (பலகாரம்) கொடுத்தார். நானும் அவனுக்கு உதவிபண்ணி அவனை அச்சப்பாத்துகளை அணியும்படி செய்தேன். பின்பு உன்னிடம் விளையாடுவதற்கு மாபிள்போளைகள் உண்டா என்று கேட்டேன். இல்லை என்றான். "நல்லதும். நான் உனக்குச் சிலவற்றைத் தருவேன்" என்று சொல்லி அவனுடைய இரண்டு சட்டைச் சாக்குகளையும் போளைகளால் நிரப்பிவிட்டேன். அதன்பின் அவன் சிரித்துக்கொண்டு கேக்கையும் சாப்பிட்டுச் சாப்பிட்டுச் சென்றான். எனக்கோ மனம்நிறைந்த சந்தோஷமாயிருந்தது. நாங்கள் எளியவர்களுக்காகச் செய்வனவெல்லாம் எங்கள் சின்ன யேசுவுக்குத்தானே செய்கிறோமென்று சுவாமி நீர் சொல்லி இருந்தீர். ஆனபடியால் நான் சந்தோஷத்தால் துள்ளித்துள்ளி "அம்மா! மிகவும் திறமான காரியம். என்னிடமிருந்த அரைவாசிப் போளைகளையும், அரைவாசிச் சப்பாத்துகளையும் சின்ன யேசுவுக்குக் கொடுத்துப்போட்டேன். இனி அப்பு மனந்திரும்புவது நிச்சயம்," என்று அம்மாவுக்குச் சொன்னேன்.

பீற்றர்.

---

புரட்டாதி......

அருமைப் பிதாவே,

நான் இன்று யோணுடனும் ஒடேற்றுடனும் கடலில் மீன்பிடித்து விளையாடினேன். கரையிலிருந்து கொஞ்சந்தள்ளி "சிறகைதீவு" என்று ஒரு தீவு உண்டு. அதற்குப் போவதற்குச் சில சிறிய ஆழமில்லாத நீர்க் குட்டைகளைக் கடக்கவேணும். தங்கச்சி ஒடேற் தான் தண்ணீருள் அமிழ்ந்திவிடுவாளோவென்று பயப்பட்டாள். ஆனபடியால் நான் அவளை எனது முதுகில் காவிச்சென்றேன். அண்ணன் யோண் என்னை வண்டில் இழுக்கும் குதிரையாகப் பாவித்துப் பின்னால் நின்று ஓய் என்று சவாரி செலுத்தினார். தூண்டலில் இரைக்காகக் குத்துவதற்கு நாங்கள் நிலப் புழுக்களைப் பிடித்தோம். என்னமாதிரிப் பிடித்தோமென்றால் நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிறு தடிகொண்டு, எங்களுக்கு விருப்பமான எதையும் மணலில் ஊன்றி எழுதுவோம். "நான் அப்புவைப் போலே ஒரு படைக் கைப்பித்தானாய் இருப்பேன்" என்று எழுதினேன். ஒடேற்று தனது பாவைப்பிள்ளைக்குத் தான் சொல்லும் கதையை எழுதினாள். யோண் சில கணிதங்களை வரைந்தான். ஒவ்வொரு எழுத்தும் எழுத எழுத அதனிலிருந்து சிறிய புழுக்கள் நெளிந்து, நெளிந்து புறப்பட்டு, வெள்ளி ஊசிகளைப்போல் வெளியே சுருண்டுகிடக்கும். ஒவ்வொரு

புழுவும் வெளிப்பட ஓடேற் பயந்து கீச்சிட்டுக்கொண்டு ஓடுவாள். நாங்கள் இருபேரும் பயப்படவில்லை. எல்லாமாக 200 புழுக்கள் பிடித்தோம். இனி உமக்கு ஒரு இரகசியம் சொல்லப்போகிறேன். ஒருமுறை ஏறக்குறைய ஒரு மாசத்தின்முன் சுவாமி நீங்கள் பாவத்தைப்பற்றிச் சொல்லிய பிரசங்கத்தை நினைவுகூர்ந்தேன். அந்தப் பிரசங்கத்திலே ஒரு சாவானபாவத்தைக் கட்டிக்கொள்ளுவதிலும் மரணத்தையே தெரிந்துகொண்ட தொங்கின்தேசத்து வேதசாட்சியாகிய சின்ன மோய் என்பவரைப்பற்றிச் சொன்னீர்கள். ஆனபடியாலும் நானும் எனது சின்ன யேசுவை நோக்கி ஒரு சாவானபாவத்தைக் கட்டுவதிலும் பார்க்க மரணத்தையே எனக்கு விதிக்கும்படி மன்றாடினேன். இந்தச் செபம் சிறிய யேசுவுக்கு மிகப் பிரியமாயிருந்ததை நான் மனதிலே உணர்ந்தேன். இப்போது ஒவ்வொருநாளும் மாலையில் செபமாலை சொன்னபின் "என் யேசுவே! நான் சாவானபாவம் கட்டிக்கொள்வதிலும் பார்க்க என்னைச் சாகப்பண்ணியருளும்" என்று மன்றாடுவேன். அப்படிச் செய்வது சரியா சுவாமி?

உமது சிறிய பீற்றர்.

---

ஐப்பசி...

அருமைப் பிதாவே,

விடுதலை முடிந்து பாடசாலை மறுபடியும் ஆரம்பமாய்விட்டது. இன்றைக்கு நான் கரேுன் என்ற நதியின் கிளைகளைப்பற்றிப் படித்தேன். புத்தகத்தைப் பாராமல் உமக்கு நான் அவைகளை எழுதிக்காட்டட்டுமா?

வலது புறத்தில்: அறியேவ்ஷ், ரரண், அவேரேுன், லோட், டோடொங், ஈல். இடது புறத்தில்: சாவ், ஷேற், பேஸ். பழமொழி: "கரேுன் நதியின் நீரைப் பருகுதல்" என்றால் என்ன? காரியங்களை உள்ளதிலும்பார்க்க மிகக் கூட்டி வர்ணித்துக் கதைத்தலாம்.

உமக்குச் சொல்லவேண்டிய சில சின்ன இரகசியங்கள் உண்டு. கோயிலில் ஒருவரும் இல்லாதவேளையில் தனிமையாய் அங்கே இருந்து செபிக்க எனக்கு வெகு விருப்பம். அப்போதான் நான் ஆண்டவருடன் தனிமையாய் இருந்து சம்பாஷித்துக்கொள்ளுகிறேன். சிலவேளைகளில் நான் அவரைக் கேட்பவைகளுக்கு அவர் எனக்கு விடை அளிப்பார். வேறு சிலவேளைகளில் ஒன்றுமே சொல்லார். என்றாலும் அவருடன் இருப்பது எனக்கு ஆனந்தம். கோயிலைவிட்டுப் போகுமுன் "சின்ன யேசுவே! இன்னும் வெகு நேரம் நான் உம்முடன் இருக்க ஆசையாய் இருக்கிறேன். ஆனால் நான் வீடுபோய் எனது பாடங்களைப் படிக்கவேணும். உம்மை நான் மறக்கமாட்டேன். உமக்காகவே எனது வேலையைச் செய்யப்போகின்றேன். ஒருவன் புரிகிற எந்த வேலையையும் உமக்காகச் செய்தால், அதுவும் ஓர் செபமே என்று சுவாமி சொல்லி இருக்கிறார்" என நான் எனது சின்ன யேசுவுக்குச் சொல்லுவேன்.

பள்ளிக்கூடத்திலே விளையாட்டு நேரத்தில் நான் எப்போதும் கோயிலுக்குக் கிட்டுமானமான பக்கத்தில் நின்று விளையாடுவேன். ஏனெ

005274



னில் ஆண்டவருக்கு அதிகம் கிட்ட இருக்கும்படியாக வெளியில் உலாத்தச் செல்லும்போது ஊரில் உள்ள ஆலயங்கள் எல்லாவற்றையும் குறிப்பாய்க் கவனித்து வைத்துக்கொள்வேன். தருணம் கிடைத்தவுடன் அங்கு சென்று ஆண்டவருக்கு வந்தனம் கூறுவேன். இரவிலே படுக்கும்பொழுது கோயில் முகமாயே திரும்பிப் படுப்பேன். படுக்குமுன் ஆண்டவருக்கு மாலைவந்தனம் சொல்லுவேன். என்றென்றும் முடிவில்லாமல் எனது நல்ல தேவனுடன் பரகதியிலே சீவிப்பது எவ்வளவு இன்பமான காரியம்! ஆனால் எனது அப்பு எங்கே இருப்பார். (என்னுடன் அங்கே இருப்பாரா?) அவருக்காக மன்றாடும்.

உமது பீற்றர்.

---

கார்த்திகை...

அருமைப் பிதாவே,

என் மனம் சலிப்பால் நிறைந்திருக்கிறது. ஒவ்வொரு காலையிலும் நற்கருணை பெற்றதன்பின், அப்புவை மனந்திருப்பவேணுமென்று நான் தேவனை இரந்து மன்றாடுவேன். அவர் அதைக் கேட்கிறதாய்க் காணவில்லை. செபமாலை சொல்லும்பொழுதும், பாடசாலையிலும் எவ்விடத்திலும் இதையே அவரிடம் கேட்பேன். ஆனால் சுவாமி, நேற்று என் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. அதென்னவாயின் ஆத்துமாக்களை ஒருவன் மனந்திருப்ப ஆவலாய் இருந்தால் அவன் மூன்று காரியங்களைச் செய்யவேண்டும். செபம் செய்யவேண்டும், போதிக்கவேண்டும், துன்ப துயரங்களை அனுபவித்துப் பாடுபடவேண்டும். நான் மிகவும் செபம்செய்து இருக்கிறேன். கொஞ்சம் போதித்துமிருக்கிறேன், ஆனால் பாடுகளை அனுபவிக்கவில்லை. ஆனபடியால் நான் ஆண்டவரைப் பார்த்து "என் நல்ல யேசுவே எனது அப்புவின் பாவங்களுக்கும், தேவதூஷணைகளுக்கும் பரிகாரம்பண்ணி, அவரை மனந்திருப்புவதற்காக என்னை அதிகம் துன்ப துயரங்களால் வருத்திப் பாடுபடப்பண்ணியருளும்" என்று மன்றாடினேன்.

"யேசுக்கிறீஸ்துநாதர் தேவன் அல்ல" என்றும், குருமார்தான் வேதம் என்று ஒன்றைக் கட்டிவைத்தார்கள்" என்றும், இன்னும் பல விதமான இப்படிப்பட்ட காரியங்களை எனது அப்பு அம்மாவுக்கு எப்போதும் சொல்லுவார். சுவாமி நீர் எனக்கு அனுப்பிய புத்தகங்களை அவர் வாசித்திருக்கிறார். அவைகள், ஒன்றையும் அத்தாட்சிபண்ணவில்லையாம். தான் ஒருபோதும் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகமாட்டாராம். நரகமென்று ஒன்றில்லையாம். இதனால் நாங்கள் எல்லாரும் மிகவும் மனத்துக்கமுடையவர்களாய் இருக்கிறோம். அம்மா அடிக்கடி கண்ணீர்விட்டு அழுவார்.

பீற்றர்.

---

மார்கழி...

அருமைப் பிதாவே,

போன ஞாயிற்றுக்கிழமை சற்பிரசாதம் உட்கொண்டபின் சின்ன யேசு எனக்கு யாதோ சொன்னதாகத் தோற்றினது. "உனது அப்புவை மனந்திருப்புவதற்காக நீ சாகிறதற்கு விருப்பமா?" "ஆம் விருப்பம்" என்று நான் மறுமொழி சொன்னேன். "ஆனால் நீ அதிகம் பாடுகளை அனுபவிக்கவேண்டிவரும்".—"அதைப்பற்றிக் காரியமில்லை. உம்முடைய உதவி இருந்தால் நான் முழுச் சம்மதமுடையவனாய் இருக்கிறேன்" என்றேன்.

இப்போது நான் சாக ஆயத்தமாய் இருக்கிறேன். ஆனால் அத்தை நான் உத்தரவில்லாமல் ஏற்றுக்கொண்டபடியால், நான் ஒரு பாவத்தைக் கட்டி இருக்கவும் கூடும். சுவாமீ! நான் ஒரு தவறு செய்தேனா?

அப்புவை இந்தப் பட்டணத்துப் பட்டாளத்தைவிட்டு இன்னொரு பட்டாளத்துக்கு மாற்றிப்போட்டார்கள். ஆனதினால் நாங்கள் எல்லோரும் ஒரு மாதத்துள் இப் பட்டணத்தைவிட்டுப் போகிறோம்.

பீற்றர்.

---

தை 1913

அருமைப் பிதாவே,

இன்றைக்கு மடத்து முதலாளிச் சுவாமியார் சற்பிரசாதப் பந்தியின் கூட்டத்தைக் கூட்டினார். ஒவ்வொரு மாதமும் இந்தக் கூட்டம் கூடும். இக் கூட்டத்து ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனை பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்களென்று முதல் முதல் வினவினார். ஒவ்வொருநாளும் சற்பிரசாதம் பெறும் முதல்வகுப்பு அங்கத்தவர் இருமடங்கு ஆனார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. நான் அப்பிரிவுக்கு ஆறு பெயரைச் சேர்த்துவிட்டேன். அதன்பின்பு சுவாமியார் எங்கள் கூட்டத்து அடைக்கலமாகிய அர்ச். ஸ்தனிஸ்லாசுவைப்பற்றிச் சில வார்த்தைகள் பேசினார். ஏழுவயதிலேதானே அந்த அர்ச்சியசிஷ்டர் தமது கற்பைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்துத் தத்தம்செய்துவிட்டார் என்று சொன்னார். அந்தநேரம் ஆண்டவர்தாமே என்னைப் பார்த்து "நீயும் அர்ச். ஸ்தனிஸ்லாசுவைப்போல என்றும் தூய இருதயமுள்ளவனாக இருக்க எனக்கு வாக்குப்பண்ண விருப்பமுடையவனாக இருக்கிறாயா" என்று என்னைக் கேட்டதுபோல் இருந்தது. நான் "ஆம் ஆண்டவரே, எனக்கு விருப்பம்" என்று சொல்லி வாக்குப்பண்ணினேன். அந்தவிதமாக எங்கள் ஆண்டவருக்கு என்னை முற்றாய்க் கொடுத்துவிட வெகு விருப்பமுடையவனாக இருக்கிறேன். நீர் எனக்கு உத்தரவு அளிப்பீராயின், நான் அந்த வாக்குத்தத்தத்தை ஒவ்வொரு காலையிலும் நற்கருணையுண்டபின் புதுப்பிப்பேன்.

பீற்றர்.

---



மாசி...

அருமைப் பிதாவே,

நாங்கள் செ......என்ற பட்டணத்துப் பட்டாளத்தைவிட்டு இப்போது ல.....என்ற பட்டணத்தில் வந்து வசிக்கிறோம். ஐயோ சுவாமி! எனக்கு மனவிசனம் மெத்த. ஏனென்றால் செ......என்ற பட்டணத்துக்கும் இவ்விடத்துக்கும் வெகு வித்தியாசம் உண்டு. இந்த ஊரிலே சற்பிரசாதப் பந்தி இல்லை. ஒரு பிள்ளையாவது ஒவ்வொருநாளும் சற்பிரசாதம் பெறப்போவதுமில்லை. அதிகம் பத்தியுள்ள பிள்ளைகள் மாசம் ஒருமுறை மாத்திரம் நற்கருணை பெறுவார்கள். நாங்கள் இந்தப் பட்டணத்திலும் ஒவ்வொருநாளும் பூசைக்குப் போவோம். இங்கு வந்து எட்டுநாளைக்குப்பின், ஒருநாள் பூசைமுடிந்தபின் கட்டளைச் சுவாமியார் அம்மாவையும் என்னையும் சங்கிடுத்தை அறைக்குள் வரும்படி கூப்பிட்டார். எனக்கோ மிகவும் பயமாய் இருந்தது. கட்டளைச் சுவாமியார் சற்றுநேரம் என்னை நல்லாய்ப் பார்த்துவிட்டு அம்மாவை நோக்கிச் சொன்னதாவது: "பிள்ளை நீங்கள் இந்த ஊரில் நடந்துகொள்ளுகிறமாதிரி சற்று நூதனமாய்த் தோற்றுகிறது. புத்தி அறிவுள்ள ஸ்திரீ ஆகிய நீர் ஒவ்வொருநாளும் நற்கருணை வாங்குவது ஒருவேளை ஒரு நூதனமாகத் தோற்றாமல் இருக்கலாம். ஆனால் நீர் இந்தச் சிறிய பிள்ளையை ஒவ்வொருநாளும் உம்முடன் சற்பிரசாதம் வாங்கக் கூட்டிக்கொண்டுவருவதைப் பற்றி மற்றவர்கள் இடறல்படுகிறார்கள். உம்முடைய பிள்ளை செய்வதை நன்றாய் விளங்கிச் செய்கிறான் என்று நீர் நினைக்கின்றீரா?" "ஆம். சுவாமிகாள். அவனுக்கு அது நன்றாய் விளங்கும். மேலும் இந்தப் பிள்ளையை ஒவ்வொருநாளும் சற்பிரசாதம் பெற ஏவிவிட்டது நானல்ல. இவனே என்னைத் தூண்டிவிட்டான்" என்று அம்மா சொன்னார். "இந்தப் பிள்ளைக்கு எத்தனை வயது?" "எட்டு". சுவாமியார் என்னைப் பார்த்துப் பீற்றர் ஏன் நீ ஒவ்வொருநாளும் சற்பிரசாதம் பெறுகிறாய். அப்படிச் செய்வதில் உன்னுடைய நோக்கமென்னவென்று கேட்டார். சின்ன யேசுவையும் பாப்பாண்டவரையும் சந்தோஷப்படுத்துமாறே என்று நான் மறுமொழி சொன்னேன். வேறேதும் ஞாயமுண்டா என்று கேட்டார். ஆம், அப்புவை மனந்திருப்புதற்குமென்று சொன்னேன். அதிக நேரம் மவுனமாய் இருந்து யோசித்துவிட்டு, நல்லதும் பீற்றர் நீ ஒவ்வொருநாளும் சற்பிரசாதம் வாங்கலாம். எங்கள் பரிசுத்த பிதா உங்கள் எல்லாரையும் அவ்விதம் செய்யும்படி பரிந்து ஏவும்பொழுது, நாம் அதைத் தடுத்தல் பிழையாய் இருக்கும் என்று சொல்லி முடித்தார். நாங்கள் வெகு சந்தோஷமாய்த் திரும்பிச் சென்றோம். நாளைக்குச் சேனாபதியின் (General) மனைவியார் எங்கள் எல்லாரையும் விருந்துக் கழைத்திருக்கிறார்.

Nallur Swami Gnanap... Library

உமது சிறிய பீற்றர்.

---

OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

மாசி...

அருமைப் பிதாவே,

எனக்குத் தற்போது நல்ல சுகமில்லை. சேனாபதியின் வீட்டிலிருந்து விருந்தால் வரும்பொழுது குளிர்பிடித்துக்கொண்டது. ஆனபடியால் இந்தக் கடிதத்தை நான் சொல்ல அம்மா எழுதி உதவிபுரிந்தார்.

சேனாபதியின் மனைவியார் அழைத்திருந்தபடி அவருடைய வீடு சென்றோம். அங்கே இன்னும் அநேக படை உத்தியோகஸ்தர்களும் அவர்கள் மனைவிமாரும் வந்து இருந்தார்கள் அங்கு இருந்த ஸ்திரீகள் எல்லாரும் அம்மாவைக் கண்டதே சுற்றி வளைந்து அவவிலே குறைகூறத் துவங்கினார்கள். என்ன சங்கதியென்றால் அம்மா என்னை ஒவ்வொருநாளும் நற்கருணை பெற விடப்படாதாம். அது பெரிதும் தவறாம். சேனாபதியின் மனைவியார்தான் கதையைத் துவக்கினார். அவர் அம்மாவுக்குச் சொன்னதாவது: "ஏய்றேல் அம்மாளே, உம்மைப்போலொத்த நல்ல ஒரு கிறீஸ்தவள் இப்படிப்பட்ட தவறை என்னென்று செய்யலாம்? அதுவும் ஒரு எட்டுவயதுப் பிள்ளையை ஒவ்வொருநாளும் தேவநற்கருணை பெற விடலாமா? உலகத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் பயித்தியம் பிடித்துவிட்டது. தேவதிரவிய அனுமானங்கள்மட்டில் தக்க மரியாதையுடன் நடந்துகொள்வது ஒவ்வொரு நல்ல கிறீஸ்தவ ஸ்திரீயுடையவுங் கடமை. தான் அவைகளை ஆசாரமாய் மதித்து நடப்பது மாத்திரமல்லாமல் தனது பிள்ளைகளும் அவைகளை ஆசாரமாய் மதித்து நடத்தும்படி படிப்பித்தல் வேண்டும். எனக்கு நாலு பிள்ளைகள் உண்டு. என்னுடைய எண்ணத்தின்படி அவர்களில் ஒருவராவது பதினொருவயது வருமுன் சற்பிரசாதம் பெறவிடமாட்டேன். அவர்கள் தாங்கள் என்னசெய்கிறோமென்றதை அப்போதான் விளங்கிக்கொள்ளக்கூடியவர்கள் ஆவார்கள்" என்றார்.

இன்னொரு தளகத்தனின் மனைவியார் சொன்னதாவது: "காலமே சற்பிரசாதம் பெறுவதனால், பிள்ளைகள் நேரம் மிகச் சென்றபின் சாப்பிடவேண்டியவர்கள் ஆகிறார்கள். அது அவர்களின் சுகத்துக்குக் கூடாது. நான் என்னுடைய பிள்ளைகள் படுக்கையைவிட் டெழுந்தவுடனேயே ஏதும் சாப்பிடப்பண்ணிவிடுகிறேன்" என்பதுவே.

தனது தலைமேல் அணிந்திருந்த தொப்பியில் ஒரு பெரிய வெள்ளை இறகு குத்தி இருந்த ஒரு அம்மாவும் அங்கே இருந்தார். அவர் மிகப் பருத்துக் கொழுத்த மனுஷி. அவர் சொன்னதாவது: "இந்த மாதிரி நவீன எண்ணங்கள் எல்லாம் வர வர அற்றுப்போகின்றன. முதற் சற்பிரசாதம் பெறுவதைப்பற்றியிருந்த கண்ணியமான எண்ணங்கள் இப்போது இல்லை. ஞான உபதேசம் படிக்கிற வகுப்புக்களுக்கும் பிள்ளைகள் முன்போலப் போவது கிடையாது"........இப்படியெல்லாம் மற்றும் துரைச்சாணிமார் கதைக்கும்பொழுது, நான் அம்மாவை நன்றாய்ப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் முகமெல்லாஞ் சிவந்து அழுபவர்போல் இருந்தார். எனக்கும் வந்த அழுகையை அடக்கிக்கொண்டு இருந்தேன். அவர்கள் பேசி முடிந்தபின் அம்மா மிகவும் மெதுவாக அவர்களுக்குச் சொன்ன மறுமொழியாவது: "அம்மணிகாள்! நீங்கள் சொன்ன நியாயங்கள் எல்லாவற்றிற்கும் மறுப்புச் சொல்ல என்னால் இயலாது. எங்கள் குருமாரும் வேதசாஸ்திரிகளும் அவைகட்குத் தக்கவிடை சொல்வார்கள். என் அளவில், நான் கற்றுக்கொண்ட வேதமெல்லாம் ஒரு மொழிக்குள் அடங்கி இருக்கிறது. அது யாதெனின்: அமைச்சல். எங்கள் பரிசுத்த பிதாவாகிய பாப்பாண்டவர் எங்கள் பிள்ளைகள் எல்லாரும் புத்தி விபரம் அறிந்தவுடனே நற்கருணை என்னும் தேவதிரவிய அனுமானத்தைப் பெறவேண்டுமென்று மிகவும் ஆவலாய் இருக்கிறார். அன்றுதொ



டக்கம் அவர்களைச் சற்பிரசாதப் பந்திக்கு அடிக்கடி, ஏலுமாயின் ஒவ்வொருநாளும் அழைத்துச் செல்வது தகுமென அவர்கள் ஆலோசனைகூறியிருக்கிறார்கள். நான் அவருடைய ஏவுதலுக்கு அமைகிறேன். அவ்வளவுந்தான். பாப்பானவர் செய்வது சரியோ என்று தீர்க்கவும், திருச்சபையிலே குறை குற்றங் கூறவும் நான் சம்மதியேன். அது சரியல்ல".

இவைகளையெல்லாம் குறிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்த எங்கள் விருந்தாளியாகிய சேனாபதி அந்தநேரம் கிட்டவந்து "ஏய்றேல் அம்மா நீங்கள் சொல்வது மெத்தச் சரி" யென்று அம்மாவுக்குச் சொன்னார். மேலும் அவர் சொன்னதாவது: "நீங்கள் சொன்ன மாதிரியான கத்தோலிக்கவேதம்தான் எனது மனதுக்கு ஒத்துப்போகிறது. வீண் நியாயங்களை வாதிக்கவும், அது பிழை, இது சரி என்று வேதத்தைப்பற்றிக் குறைகூறி வாதாடவும் விருப்பமாய் இருந்தால், நாங்கள் புறோட்டஸ்தாந்தராய் போய்விடுதல் நன்று. ஏனெனில் அதன்பின் எங்களுக்கு விருப்பமான எதையும் விசுவசிக்கலாம். விருப்பமில்லாததைத் தள்ளிவிடலாம்".

அதன்பின் அவர் என்னைப்பார்த்து: "பீற்றர் இங்கே வா. இந்தத் துரைச்சாணிமாருக்குக் கொஞ்சம் ஞான உபதேசம் சொல்லிக்கொடு. "திருச்சபைக்கு அதிகாரி யார்?" "ஐயா பரிசுத்த பாப்புவே அதன் தலைவர்" "என்னுடைய சிநேகிதனே நீ சொல்வது மெத்தச் சரி" என்று அவர் சொல்லிவிட்டு அங்கிருந்த துரைச்சாணிமாருக்கு அவர் சொன்னதாவது; "அம்மணிகாள், நீங்கள் இவ்வளவு நேரமும் சொன்ன நியாயங்களுக்குத் தகுந்த மறுமொழி இச்சிறுவன் சொல்லி இருக்கிறான். சற்றே நினைத்துப்பாருங்கள். எனது பட்டாளத்திலுள்ள ஒவ்வொரு ஆசாமியும், கந்தனும் பூதனும் வந்து "ஐயா இது இப்படிச் செய்யவேணும், அது அப்படிச் செய்யவேணும். சண்டைக்குப் போகும்பொழுது இன்ன மாதிரித் தாக்கவேணும் என்று எனக்குப் பாடம்படிப்பிக்க முயன்றால், நான் கொடுக்கும் கட்டளை சரியோ பிழையோவென்று என்னுடன் வாதாடத் துணிந்தால் எனது நிலைமையும் எனது சேனையின் நிலைமையும் எப்படி இருக்கும். சற்றே யோசித்துப்பாருங்கள். நான் பாப்பாண்டவரைப்போல் வழுவாவரம் பெற்றவனுமல்ல. அவருக்குப்போல் எனக்கு இஸ்பிரீத்துசாந்துவானவர் விசேஷ ஏவுதல்களைத் தந்து உதவவும் மாட்டார்" என்று பேசியபின் என்னைப் பார்த்துச் "சிறிய பீற்றர், நீ மகா கெட்டிக்காரன். இங்கு வா, என்னை வந்து ஒருக்கால் கொஞ்சிவிடு" என்று சொன்னார். நான் அவரை மூசி மூசி இரண்டுமுறை கொஞ்சிவிட்டேன்.

அப்புவும் நாங்களும் அவர் வீட்டை விட்டுப் போகுமுன் சேனாபதி அப்புவுக்குச் சொன்னதாவது: "துரையே! உமது மகனையிட்டு உமக்குச் சோபனங் கூறுகிறேன். பிற்காலத்தில் இச்சிறுவனால் உமக்குப் புகழே ஒழிய இகழ் ஒன்றும் வரா"தென்றார். தெருவில் நாங்கள் இறங்கியவுடன் எனது அப்பு எனது கையைப் பிடித்து அன்பின் அடையாளமாகத் தடவி நகித்தார். அவருக்கு என்னிலே இருந்த சந்தோஷத்தை நான் விளங்கிக்கொண்டேன். அன்று மாலை நான் படுக்கைக்குப் போகுமுன் எனது செபமாலையில் அரைவாசியை அந்தச் சேனாபதிக்

காகச் சொன்னேன். ஏனெனில் அவர் எனது அம்மாவுக்குக் காட்டிய கண்ணியத்தின் நிமித்தமே அப்படிச் செய்தேன். நான் உம்மைக் கட்டி அரவணைக்கிறேன்.

பீற்றர்.

---

மாசி...

அருமைப் பிதாவே,

திரும்பவும் தொடங்கிவிட்டார்கள். போன வியாழக்கிழமை சில துரைச்சாணிமார் அம்மாவைச் சந்திக்க வந்தார்கள். திரும்பவும் நான் அம்மாவுடன் ஒவ்வொருநாளும் நற்கருணைபெறப் போவதைப்பற்றி அவரை மிகவும் தாக்கிக் கதைத்தார்கள். அவருக்காக நியாயஞ்சொல்ல இம்முறை ஒருவரும் இருக்கவில்லை. அவர்கள் போனதின்பின் அப்பு மிகவும் சினந்து, பொங்கி அம்மாவிற் பாய்ந்து "ஊரில் உள்ளவர்களில் ஆர்தான் எங்களை கையாண்டிபண்ணுதவர்? இந்தப் பத்திக் கிருத்தியங்களோ, பைத்தியமோ எப்போதான் ஒரு முடிவுக்கு வரும்" என்று சொல்லி ஏசினார். அம்மா, உடனே அழத்தொடங்கினார். அப்போது நான் அப்புவைப் பார்த்து நான் ஓர் சிறிய புத்தகத்தில் வாசித்ததைச் சொன்னேன். "அப்பு, நீங்கள் என் என்னை ஒவ்வொருநாளும் சாப்பிடப்பண்ணுகிறீர்கள்?" "என்ன! அது உனக்குத் தெரியாதா? உனது சரீரத்தைப் போஷிப்பதற்கே"—"அப்போது, அப்பு நான் எனது ஆத்துமாவைப் போஷிப்பதற்காய் ஒவ்வொரு நாளும் சற்பிரசாதம் உட்கொள்ளுகிறேன்" என்று சொன்னேன். அவர் ஒன்றும் சொல்லாது விறுக்கெனத் தனது அறைக்குள் புகுந்தார். வழமையாய் என்னைக் கொஞ்சுவார். அன்றைக்கு அதுவுமில்லை. எங்களுக்கு மிகவும் மனவருத்தம்.

நான் படுக்கைக்குச் சென்றபின் அம்மா எனது அறைக்குள் வந்து "என்னுடைய ஆசை மகனே, எல்லாரும் எங்களுக்கு மாறாக இருக்கிறதை நீ காண்கிறாய் அல்லவா?......எங்களுக்கு உதவிபண்ணவும் தைரியங் கூறவும் ஒருவருமில்லை. ஒருவேளை இந்த ஊர்வழமையை நாங்களும் பின்பற்றுவதுதான் நல்லதுபோல் எனக்குத் தோற்றுகின்றது". "ஆம் அம்மா. ஆனால் நாங்கள் மனிதரைப் பிரியப்படுத்தக் கடவுளின் கட்டளையை மீறுகிறவர்களாவோமே" என்று சொன்னேன். "நீ சொல்வது சரிதான் பீற்றர், ஆனால் இந்தமாதிரி நாங்கள் செய்தால் எல்லாரும் எங்களில் குறை கூறிக் குற்றம் பிடிப்பார்கள். உனது அப்புவும் எங்களுடன் ஆறாத கோபமுடையவராவார்" என்று சொன்னார். நான் மறுமொழியாகச் சொன்னதாவது: "அம்மா, நீங்கள் சொல்வது மெய்யே. ஆனால் இதை விலக்க ஒரு சூழ்ச்சம் நாங்கள் எடுக்கலாம். எல்லாமாக ஏழு கோயில்கள் இந்தப் பட்டணத்தில் உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டளைச்சுவாமியாரது கோவிலுக்குப் போய்ச் சற்பிரசாதம் பெறுவோம். மற்றும் நாட்களில் ஒவ்வொருநாளும் வெவ்வேறு கோயிலுக்குப் போவோம். வழமையாய் நித்திரையைவிட்டு எழும்பும் நேரத்துக்குக் கொஞ்சம் முன் எழுந்தால் போதும்".



அம்மா என்னை இருமுறை முத்தமிட்டுப் "பீற்றர் நீ சொல்வது சரி. நல்ல புத்தி. நாங்கள் நாளைக்கு நேரத்துடன் தொடங்குவோம். எங்களுக்கு உதவிசெய்யும்படி உனது காவற் சம்மனசிடம் மன்றாடு" என்று சொன்னார். அன்று தொடங்கி நாங்கள் வழமையிலும் கால் மணித்தியாலம் முந்தி எழும்பி ஒவ்வொருநாளும் ஒவ்வோர் தேவ ஆலயத்துக்குப் போய் பூசைகண்டு சற்பிரசாதம் பெற்றுக்கொள்ளுகின்றோம்.

ஆ! சுவாமி எங்கள் யேசுவிடம் போகவும், அவரைக் காணவும், சிறுவர்களாகிய எங்களை விடாமல் எத்தனை தடைகளை உண்டாக்கி எல்லாரும் எங்களை மறிக்கிறார்கள்!

உம்மை முத்தமிடும்

உமது பீற்றர்.

---

[ இவ்விடத்தில் பேசியோ் சுவாமியார் எழுதுவது:— வேளாண்மை விளைந்தவுடன் எசமான் வந்து அதை அறுத்துத் தமது களஞ்சியத்துட் சேர்ப்பார். அல்லாவிடில் சத்துராதியானவன் வந்து அதனுள் களையை விதைத்துவிடுவான். போர்வீரன் நன்றாய்ப் போர் புரிந்தபின் எசமான் அவனுக்கு முடிசூட்டுவார். சின்னப் பீற்றர் போர் புரியவேண்டியவனானார். யேசுநாதருக்குப் பிரமாணிக்கமுள்ளவராய் இருப்பதற்காகத் தன்னுடைய பெலன் எல்லாங்கொண்டு கடும்போர்புரிய வேண்டியவரானார். ஆதிகாலத் திருச்சபையிலே அர்ச். தார்சீசியஸ் என்னும் சிறுவன் வேதசாட்சியாகத் தனது உதிரத்தைச் சிந்தியதுபோல் பீற்றரும் சிந்தவேண்டுமென்று ஆண்டவர் கேட்கவில்லை. ஆனால் பீற்றர் தனது நேசம் நிறைந்த இருதயத்தின் உதிரம் யாவையும் ஆண்டவருக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார். இப்போது அவருக்கும் முடிசூட்டப்படும் காலம் கிட்டிவிட்டது. ]

---

பங்குனி...

அருமைப் பிதாவே,

நான் படுக்கையிலே இருந்து உமக்குப் பென்சிலால் இச்சிறுகடிதத்தை எழுதுகிறேன். அம்மாவும் யோனும் ஒடேற்றும் பூசைகாணப் போய்விட்டார்கள். இன்றைக்கு நான் சற்பிரசாதம் பெறமாட்டேன். இனிமேல் ஒருக்காலும் சற்பிரசாதம் வாங்குவதற்கு வீட்டைவிட்டுப் போகமாட்டேன் என்றுதான் நினைக்கிறேன்.

நான் இப்போது தனியே எனது நீலவர்ணம் பூசிய அறையில் இருக்கிறேன். போன வெள்ளிக்கிழமை சற்பிரசாதம் உட்கொண்டபின் யேசுநாதர் முன்சொன்னதை மறுபடியும் எனக்குச் சொல்லுமாட்போலிருந்தது. "சிறிய பீற்றர், உனது தந்தையை மனந்திருப்புதற்காக நீ உன் உயிரைப் பலியாகக் கொடுக்க இன்னுந்தான் மனமுடையவனாய் இருக்

கிறாயா ''? " ஆம், ஆண்டவரே '' என்று உரைத்தேன். அதன்பின் அப்புவுடைய பாவங்களைப் பரிகரிப்பதற்காக என்னை அதிகமதிகமாக வருத்தும்படிக்கு எங்கள் ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடினேன். அன்று பின்னேரம் நான் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் எனது நெஞ்சிலிருந்து இரத்தம் இரத்தமாகச் சத்தி எடுத்தேன். அவ்விதமே மறுநாளும், அடுத்தநாளும் எனக்கு நடந்தது. வைத்தியனை அழைத்தார்கள். அவர் வந்துபோனதன்பின் அம்மா என்னைக் கட்டி அரவணைத்துக் கொண்டு அழுதார். அதன்பின் எனக்குச் சுகம் கிடைக்கும்படியாக ஒரு நவநாட்செபம் செய்யவேண்டுமென்று யோணுக்குச் சொன்னார்.

ஆனால் சொஸ்தமடைவதற்கு எனக்குக் கிஞ்சித்தேனும் விருப்பமே இல்லை. மோட்சம் சென்று எனது சின்ன யேசுவைக் கண்டு எனது அப்புவை மனந்திரும்பச்செய்வதற்காய், நான் மரணிக்க விருப்பமுடையவனாய் இருக்கிறேன். அதிகம் பீடைகளை அநுபவிக்கிறேன். ஆனால் பாவிகளை மனந்திருப்புதற்காய்ப் பாடுபடுதல் எனக்கு ஆனந்தம். நான் மரணித்தபின்பு அப்புவுக்காக மன்றாடிக்கொள்ளும். சுவாமி உமக்குப் பிரியாவிடை கூறுகின்றேன். மோட்சத்தில் நீரும் நானும் மறுபடி சந்தித்துக்கொள்ளுவோம்.

உமது சிறிய பீற்றர்.

---

பங்குனி...

அருமையான பிதாவே,

இது என்னுடைய கடிதம்தான். ஆனால் எனது கையால் உமக்கு எழுத என்னால் இயலாது. ஆனபடியால் நான் சொல்ல, யோண் இதை எழுதுகிறார்.

நான் சின்ன யேசுவைக் காணப்போகின்றேன். இன்னும் அநேக நாட்களுக்கு நான் நின்றுபிடிக்கமாட்டேன். எனக்கு மனதிலே எவ்வளவோ சந்தோஷமாய் இருக்கிறது! நான் தனியே இருக்கும்பொழுது மகா ஞானஒடுக்கத்தில் நாங்கள் பாடிய " மோட்சம் போவோம்! மோட்சம் போவோம்! மாதாவைக் கண்டு மகிழ '' என்ற கீர்த்தனத்தைப் பாடுவேன்; அல்லது இன்னொரு கீர்த்தனத்தைப் பாடுவேன். அதாவது:

" மாமரியே! மதுரத் தாயே
பாவிகட் கிரங்கிடாயே
நேய உம் மன்றாட்டத்தினால்
தீய மனம் மாறிடவே ''.

ஞானஒடுக்ககாலத்தில் இந்தக் கீர்த்தனத்தை, நாங்கள் எங்கள் இரு கரங்களையும் சிலுவையை ஒத்தபான்மையாய் விரித்துப் பாவிகள் மனந்திரும்புதற்காய்ப் பாடினோம்.



தற்போது சொற்ப காரியங்கள்தானும் எனக்கு வருத்தத்தைத் தருகின்றன. ஆனால் இப்போ என் மனதிலே உள்ள சந்தோஷம்போல் முன் ஒருக்காலும் இருக்கவில்லை. கட்டளைச்சுவாமியார் என்னைப் பார்க்கவந்தார். வந்தபோது நான் ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொரு ஆலயமாகச் சென்று நற்கருணை உட்கொண்டது மெய்யோவென்று வினவினார். நான் ஆம் என்று சொல்லித் தலையைக் குனிந்தேன். " தம்பீ பீற்றர் நீ ஏன் அப்படிச் செய்தாய் '' என்று கேட்டார். " நான் சின்ன யேசுவையும், பாப்பானவரையும் சந்தோஷப்படுத்தவும், அப்புவை மனந்திருப்பவுமே'' என்றேன். " நீ உன் அப்புவை மனந்திருப்ப ஆசைப்படுகிறாயா ? '' " ஆம்! ஆம்! அதற்காகத்தானே நான் மரணிக்கவேண்டுமென்று மன்றாடினேன் ''. இதைக் கேட்டதும் கட்டளைச்சுவாமியாரவர்கள் அழத் தொடங்கினார். அழுதுகொண்டு வேறு ஒன்றும் சொல்லாது போய்விட்டார். எனக்கு ஒவ்வொருநாளும் நற்கருணை கொண்டுவரவேணுமென்று அவரைக் கேட்க என் மனம் துணியவில்லை. ஆனால் என் சின்ன யேசு எனக்கு நற்கருணை கொண்டுவரவேணுமென்று நான் அவரைக் கேட்கப் போகின்றேன்.

உமது சிறிய பீற்றர்.

---

பங்குனி...

அருமைப் பிதாவே,

தற்போது எனக்கு இருந்ததில் சற்றே சுகம்போற் தோற்றுகின்றது. உமக்குப் பென்சிலினால் ஒரு கடிதம் எழுத என்னால் இயலும். ஆனால் எனது அண்ணன் யோண் என்னை அப்படிச் செய்யவேண்டாமென்றதனால் நான் அவரைக்கொண்டு இதை எழுதுவிக்கிறேன்.

மறுநாட்காலை என்னைப் பார்ப்பதற்காக மறுபடியும் கட்டளைச்சுவாமியார் வந்தார். அவர் என்னைக் கடிந்துகொள்ளப்போகிறாரென நினைத்தேன். ஆனால் எனது கையைப்பிடித்துக்கொண்டு அவர் என்னைக் கேட்டதாவது: " பீற்றர், உனக்கு ஒவ்வொருநாளும் நற்கருணைபெற ஆசையுண்டா? '' " ஆம், மெத்த விருப்பம் சுவாமி '' என்று சொன்னேன். " மெத்த நல்லது, நானே எங்கள் திவ்விய கர்த்தரை உனக்கு ஒவ்வொருநாளும் கொண்டுவருவேன். நாளைக்குத் தொடங்குவோம். அருமையான பீற்றர் எனக்காகவும் சற்றே வேண்டிக்கொள் '' என்று சுவாமி சொன்னார். மறுநாள் அவர் மிகவும் வெள்ளென வந்தார். அம்மா என்அறையை எங்கும் பூக்களால் அலங்கரித்துவிட்டார். யோணும் ஒடேற்றும் மெழுகுவர்த்திகளைக் கையிற் பிடித்துக்கொண்டு முழந்தாட்படியிட்டுச் செபித்தார்கள். அப்புவுடைய மனம் மிகவும் கசிந்து உருகியவரானார். அவரும் முழந்தாளிலிருந்தார், செபம் செய்தார் என்றுதான் நம்புகிறேன். சுவாமியார் சில பத்திமுயற்சிச் செபங்களைச் சொல்லி என்னை ஆயத்தப்படுத்தியபின், நற்கருணை தந்து, நன்றியறிந்த ஸ்தோத்திரமுஞ்செய்ய எனக்கு உதவிபண்ணினார். " உன தருமையான பெற்றாருக்காக மன்றாடு '' என்று அவர் சொன்னபொழுது நான் எனது அப்புவைப் பார்த்தேன். அவர் தனது கைலேஞ்சியினால் தனது கண்களை மூடிக்கொண்டிருந்தார்.

அன்று பின்னேரம் கட்டளைச்சுவாமியார் மறுபடியும் வந்து “பீற்றர், சிறுபிள்ளைகள் உன்னைப்போல அடிக்கடி கூடுமானால் ஒவ்வொரு நாளும் நற்கருணை பெறும்படி செய்ய, நாங்கள் என்ன செய்யவேண்டும்” என்று என்னைக் கேட்டார். “சுவாமிகளே, செ......என்ற பட்டணத்திற்போல இங்குமொரு சற்பிரசாதப் பந்தி ஸ்தாபித்தல் வேண்டு”மென்று சொன்னேன். “மெத்த நல்லது பீற்றர். நான் உடனே அந்தக் கூட்டத்தை ஸ்தாபித்துவிடுகிறேன். நாளைக்கும் மறுபடி நான் வந்து உனக்குச் சற்பிரசாதம் தருவேன்” என்று சுவாமிசொன்னார். அப்போது அம்மா அவரைப் பார்த்துச் “சுவாமி, நீங்கள் வயதில் முதிர்ந்தபடியால் வெள்ளென வருவது உமக்குத் தொந்தரவாயிருக்குமே. உமது உதவிக் குருவானவர் இளம்வயசினர். அவர் வரலாமே” என்று சொன்னார். அதற்கு அச்சுவாமியார் சொன்னதாவது: “இல்லை, இல்லை, முன்மாதிரி காட்டுதல் எனது கடமை. எங்கள் ஆண்டவரும், பரிசுத்த பிதாவாகிய பாப்புவும் சிறுவர்களைச் சற்பிரசாதத்தினால் போஷித்து வளர்க்கவேணுமென்று ஆவலாய் இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணத்தின்படி எனது ஞானப்பிள்ளைகளின் ஆன்மாக்களை வளர்ப்பதே எனதாசையென்பதை எல்லாரும் அறியட்டும். ஆ! சிறுவர்களிலே எங்கள் ஆண்டவருக்கு மற்ற எவரிலும்பார்க்க உள்ள நேசத்தைப்பற்றிச் சற்றே எனக்கு விளங்கும்”. இவைகளைச் சொல்லி, பின் என்னைக் கட்டியரவணைத்து வெளியே மீண்டார்.

உமது சிறிய பீற்றர்.

---

பங்குனி 15-1913.

அருமைப் பிதாவே,

நான் மரணிக்கமுன் சின்ன யேசு எனக்கு எல்லா விதமான சந்தோஷத்தையும் தர விரும்புகிறார். எங்கள் கட்டளைச்சுவாமியார் இவ்வூரிலும் ஒரு சற்பிரசாதப் பந்தியை ஸ்தாபித்துவிட்டார். மேலும் பெரிய வியாழக்கிழமை ஐந்து வயதுள்ள எனது தங்கச்சி ஓடேற் முதற் தேவநற்கருணை வாங்கலாமென்று உத்தரவு அளித்திருக்கிறார். ஆக இப்போது மிச்சமாய் உள்ளது எனது அப்புதான்.

என்னுடன் செபஞ்செய்யவேண்டுமென்று நான் அவரைக் கேட்டபொழுது, அவர் அப்படிச் செய்தார். என்னுடன் எனது அப்பு ஒரு முழுச் செபமாலையும் ஓதி “மிகவும் இரக்கமுள்ள தாயே” என்ற செபத்தையும் சொன்னார். அவர் மனந்திரும்பும்பொழுது நான் இவ்வுலகில் ஒருவேளை இருக்கமாட்டேன். ஆனால் நான் அதைப் பரலோகத்திலே இருந்து காண்பேன். நான் இந்தப் பலியை அதற்காகவே ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன். இப்போது எனக்குத் துப்புரவாக இரவில் நித்திரை வருகிறதில்லை. இராமுழுதும் அதிகமதிகமாக இருமுகிறேன். இதுதான் உமக்கு நான் எழுதும் கடைசிக் கடிதமென்று நினைக்கிறேன். சுவாமி, நான் உமக்குப் பிரியாவிடை கூறுகிறேன். மோட்சத்திலே மறுபடியும் கண்டுகொள்ளுவோம்.

உமது சிறிய பீற்றர்.

“நற்கருணைப்பந்திக்காக நான் மோட்சத்திலே வெகுவாகமன்றாடுவேன்”.

---

# மூன்றாம் பாகம்

## சிறிய பீற்றரின் தந்தை, பீற்றர் மரணித்தபின் அவரின் நண்பராகிய குருவானவருக்கு எழுதிய இரு கடிதங்கள்

### 1

உயிர்த்த ஞாயிறு—1913.

அருமைப் பிதாவே,

எங்களுக்கு நிகழ்ந்த பிரலாபமான நஷ்டத்தை அறிவிக்கும்பொருட்டு இத்தை உமக்கு எழுதுகின்றேன். எங்கள் சின்னச் சம்மனசானவர் எங்களை விட்டுப் பறந்துவிட்டார். சிறிய பீற்றர் போய்விட்டார். போன மாசம் முழுதும் உண்மையாகவே அவர் ஒரு வேதசாட்சி பட்டபாடெல்லாம் பட்டார். கொஞ்சமேனும் முறுமுறுக்காமலும், ஓர் அற்பமாவது தான் பட்ட வருத்தங்களால் தனது பொறுமையை இழக்காமலும், பெரிய அர்ச்சியசிஷ்டர்களைப்போலவே தனது நோவுகள் யாவையும் தாங்கி அனுபவித்தார்.

கட்டளைச் சுவாமியார் ஒவ்வொரு காலையிலும் அவருக்கு நற்கருணை கொண்டுவருவார். இராமுழுவதும் நித்திரையின்றி அந்தச்சந்தோஷமான நேரத்தையே காத்து விழித்திருப்பார். நற்கருணை அருந்தும் நேரமே அவருக்கு மோட்சமாயிருந்தது. குருவானவர்வரும் காலடிச்சத்தம் படிகளில் கேட்டவுடனே அவர் முகம் பிரபைவிட்டிலங்கும். அவருடைய கண்களோ தேவனைக் காண்பவைபோற் பரவசமாய்ப் பார்த்துநின்றன. அப்படியே நாள்முழுவதும் கடவுளைக் காண்பவர்போல் ஆனந்தத்தில் மூழ்கியிருப்பார்.

நான் எப்போது அவருடைய அறைக்குட் சென்றேனோ, அவ்வேளைகளிலெல்லாம், ஒன்றில் செபமாலை ஓதியபடியிருப்பார், அன்றேல் தேவகீர்த்தனைகளைப் பாடுவார். நான் “தம்பீ, சற்றே இளைப்பாறு” என்று சொன்னால், “அப்பு, நான் ஆண்டவருடன் சம்பாஷிப்பதுதான் எனக்கு இளைப்பாற்றி” யென்று சொல்வார். “என்ன காரியத்தைப்பற்றி அவருடன் சம்பாஷிக்கிறாய்” என்று கேட்டேன். “உம்மைப்பற்றித்தான், அப்பு” என்று சொன்னார்.

அவர் மரணிக்க முந்தியநாளன்று, அவரின் தாயார் அவர் சுகமடையும்பொருட்டு இரண்டாம் முறையாக ஒரு நவநாட் செபம் தொடங்கப் போகிறதாக அவருக்குச் சொன்னார். அதைக் கேட்டதும் அவர் அழுதுகொண்டு, “ஒருக்காலும் ஆகாதம்மா! நான் சாவதைத் தடுக்கவேண்டாம். என் உயிரைப் பலியாக ஒப்புக்கொடுத்து, எனது அப்புவை நான் மனந்திருப்பவேண்டும்” என்று சொன்னார்.

பெரிய வியாழக்கிழமை காலமே அவர் மரணித்தார். சில மணித்தியாலங்களின்முன், ஒடேற் முதற்சற்பிரசாதம் பெற்று பீற்றரைக் காண வந்தாள். பீற்றர் அவளை அன்புடன் கட்டி அரவணைத்துவிட்டுத் தனது ஈறுந்த நற்கருணையைப் பெறுவதற்கு ஆயத்தப்படுத்தினுர். கட்டளைச் சுவாமியார் நற்கருணையுடன் வந்தார். பீற்றர் மோட்சானந்தமே தனது கண்களில் நிறைந்தவராய் தனது இரு கரங்களையும் சேர்த்து வணங்கிக் கொண்டு கட்டிலில் முழந்தாட்படியிட்டார். பின்பு தான் சிலதருணங்களில் எனக்கு அமைச்சலீனங் காட்டியதற்காக என்னிடம் பொறுத்தல் கேட்டார். நான் “என் செல்வமே, உன்னிடத்தில் நான் அல்லவோ பொறுத்தல் கேட்கவேண்டும்......” என்று சொல்லத் தெண்டித்தேன். ஆனுல் எனது கண்ணீர்களும், என் விம்மலும்பொருமலும் எனதுவாயைப் பூட்டிவிட்டன. அவருடைய தாயும், சின்ன யோணும், ஒடேற்றும் கூவென்று என்னுடன் அழுதார்கள். கட்டளைச் சுவாமியாரும் விம்மி விம்மி அழுதார். எங்கள் பீற்றர் மாத்திரம் யாதொரு சலிப்புமின்றி அமைதியாகவிருந்து எங்கள் எல்லாருக்கும் ஆறுதல் சொன்னுர். கோவில் மணிகளெல்லாம் பூசைக்காக அடிக்கத் தொடங்கின. அந்தநேரமே அவருடைய கடைசி அவஸ்தையும் தொடங்கினது. மரணஅவஸ்தைப்படும் பொழுது என்னை அவர் கூப்பிடுமாப்போல் தோற்றினது. நான் எழுந்து எனது காதை அவர் உதடுகளுக்குக் கிட்ட வைத்தேன். அவர் மெல்லென எனக்குச் சொன்னதாவது: “எனது அருமையான அப்பு, நான் போய்வருகிறேன்......மோட்சத்திலே சந்தித்துக்கொள்ளுவோம்........ இது உமக்காகவே”. (அதாவது தனது பிதாவுக்காகவே தனது உயிரைப் பலியாக்கினுர் என்பது கருத்து) என்று சொல்லித் தனது சிறிய மெல்லிய விரல்களால் செபமாலையை இறுக்கிப் பிடித்தபடி ஆவியை விட்டார்.

மரணித்தவுடனே அவருடைய முகம் மோட்ச ஆனந்த வெளிச்சத்தினுல் பிரதிபிம்பித்ததுபோல் சொலித்துக்கொண்டிருந்தது. அவர் வதனம் புன்சிரிப்பால் அழகாய் இருந்தது. வியாதியால் சிறுத்து மெலிந்த அவர் சரீரம் முழுவதிலும் நித்திய சமாதானமே நிறைந்து வடிவது போற்தோற்றியது. தேவ மகிமையின் ஓர் பங்கு இச் சம்மனசிலே சோபிதமாய் இலங்குவதை அப்போதுதான் நான் உணர்ந்தேன். அவருக்கு நிர்ப்பாக்கியனுகிய நான் பிதாவாய் இருப்பதற்கு எவ்வளவு அபாத்திரனென்றதை அப்போது நன்ருய் உணர்ந்தேன்.

இருபது வருஷங்களாகச் செபமே செய்யாத நான், இருபதுவருஷங்களாக எனது வேத விசுவாசத்தை இழந்துவிட்டநான், அந்த மரணப் படுக்கையின் பக்கத்தில் முழந்தாளிட்டேன். முழந்தாளிட்டு அழுதேன். விம்மி அழுதேன். செபம் செய்தேன். எனது அரிய மகனை நினைத்தல்ல. என்னை நினைந்தே. இந்த நீச உலகத்திலே, நான் சீவித்த நிசிதமான சீவியத்தைப் பொறுத்தருளும்படி, ஆண்டவரையும், எங்கள் சின்னச் சம்மனசானவரையும் பார்த்து மன்ருடினேன். ஆ! என்னை நினைந்து எவ்வளவு வெட்கப்பட்டேன். எனது பிள்ளையோ எவ்வளவு மகிமையுடையவன்! அவர் பக்கத்திலே நான் எவ்வளவு இழிவுள்ளவனுக இருந்தேன். இவ்வளவு பெரும் பாவியாகிய நான், தேவனை மறுத்த துரோகியாகிய

005274



நான், ஆசீர்வதிக்கப்பட்ட அவர் கிட்ட இருக்கவும், அவர் சடலத்தை அரவணைக்கவும் அபாத்திரனென்றதை நன்ருய் உணர்ந்தேன். எனது மாசு நிறைந்த ஆத்துமத்துடன் அன்றிரா முழுதும் அவர் பக்கத்திலே என்னென்று இருக்கப்போகிறேன் என்ற எண்ணம் என்னை வாதித்தது. பொதுத் தீர்வையிலன்று சபிக்கப்பட்டு நரகத்துக்கு ஆளாகும் பாவிகள் பரிசுத்தமே உருவான பரம சொரூபியின்முன் படப்போகும் வெட்கத்தை நானுமுணர்ந்தேன். கடைசியில் அந்த அறையைவிட்டு நானெழும்பி ஓடி, ஒரு குருவானவரைக் கண்டு நான் என் சீவியத்திலே கட்டிக்கொண்ட பாவங்களெல்லாவற்றையும் அவருக்கு வெளியிட்டுப் பாவசங்கீர்த்தனம்பண்ணினேன். அதன்பின் மாத்திரமே எனது பிள்ளையின் அருகே போகவும், அவருடைய சடலத்தை அரவணைக்கவும், எனது மனச்சமாதானம் எனக்கு இடந்தந்தது.

நற்கருணை முதன்முதல் பெற்றபொழுது அவர் அணிந்த உடையை அவருக்கு உடுத்திக் கட்டிலில் வளர்த்தி, அவரைச் சுற்றவர மெல்லிய வெண்மையான தூய லீலி மலர்களால் அலங்கரித்துவிட்டோம். பின்பு முழந்தாட்படியிட்டு எனது பாவம் நிறைந்த ஆத்துமத்தை அவருக்கு ஒப்படைத்தேன். அவர் அதை ஆசீர்வதித்துக் காப்பாற்றும்படி அவரை வேண்டினேன். பரிசுத்த சனிவாரமாகிய அன்று, ஆண்டவர் உத்தானமானுரென்று பட்டினத்து மணிகள் எல்லாம் ஆர்ப்பரித்த அவ்வேளையில், நாங்கள் அவருடைய மேனியை அடக்குவதற்காகக் கொண்டு புறப்பட்டோம். பிரேத அடக்கத்துக்கென வந்தவர்கள் சுற்றுப்பிரகாரமாய் நடந்து செல்லும்பொழுது, துக்கமென்றது சற்றுமின்றி ஒரு வெற்றிவீரனைத் துதித்துச் செல்பவர்கள்போல் ஆனந்தமாகவேநடந்தார்கள். அந்தப் பகுதிக்குச் சேர்ந்த சிறுவர்கள் யாவரும் தாங்கள் முதற்சற்பிரசாதம் பெற்றபொழுது அணிந்த ஆடைகளையே அணிந்து சென்ருர்கள். நான் கண்ணீர்விட்டு அழுதேன். ஆனுல் என் கண்ணீர்களில் மிகுதியும் சந்தோஷமும் சொற்ப துக்கமுமே இருந்தன. நான் முன் ஒருபோதும் அறியாத மனச்சந்தோஷமும் சமாதானமும் என் இதயத்தை நிரம்பச் செய்தன.

சவக்காலையில் வெள்ளை உடைகள் அணிந்த பிள்ளைகள் யாவரும் சவக்குழியைச் சுற்றிநின்ருர்கள். செபங்கள் முடிந்து, உரிமை மண் போட்ட பின்பு கட்டளைச் சுவாமியார் பின்வருமாறு பிள்ளைகளுக்குச் சில வார்த்தைகளைச் சொன்னுர்:—எனது மிகவும் அருமையான பிள்ளைகளே, என்னுடைய மனம் முழுதும் பலவகையான உணர்ச்சிகளாலும் அருட்டப்பட்டிருக்கும் இவ்வேளையில், உங்களுக்கு அதிகம் பேச என்னுல் இயலாது. ஆனுல் உங்களுடைய இந்தச் சின்னச் சிநேகிதனுடைய ஆத்துமத்திலே ஆண்டவர் புரிந்த பென்னம் பெரிய வரப்பிரசாதங்களுக்காக நாங்கள் ஆண்டவரைத் துதித்துச் செபம்பண்ணப்போகிருேம். தேவ வரப்பிரசாதமானது மனிதரை அர்ச்சியசிஷ்டராக்கும்பொழுது, சிறியவர் அல்லது முதியவரென்ற வித்தியாசத்தைப் பார்ப்பதே கிடையாது. எங்கள் சிறிய பீற்றரைப் பெரிய அர்ச்சியசிஷ்டராகவும், வெற்றிவீரனுகவும் மகிமைப்படுத்திவிட்டது தினமும் அவர் உட்கொண்ட நற்கருணையே. தாம் இப்போது வாசம்பண்ணும் பரகதியாகிய உன்னதங்களில்

இருந்து அவர் எங்களைக் கருணையுடன் பார்ப்பாராக! உங்களையும், உங்கள் மேய்ப்பனாகிய என்னையும் படிப்பித்து வழிநடத்தும்படி என்றும் எங்கள் மத்தியில் அவர் எங்கள் அப்போஸ்தலராக இருப்பாராக! தேவநற்கருணையில் எழுந்தருளி இருக்கும் எங்கள் ஆண்டவர், எங்களுடன் ஒன்றுபட்டிருக்கவும், எங்கள் ஆத்துமங்களை வரப்பிரசாதத்தால் வளர்க்கவும் அவைகளுள் ஒவ்வொருநாளும் வந்து வசிக்கவும், அவருக்குள்ள பெரிய வாஞ்சையைப்பற்றி நாங்கள் நன்றாய் உணரும்படிக்கு இந்த அப்போஸ்தலர் எங்களுக்குக் கிருபைபுரிவாராக ''.

எங்கள் எல்லாருக்காகவும், விசேஷமாய் எனக்காகவும் அருமைப் பிதாவே மன்றாடியருளும். நான் என் பிள்ளைக்குச் சரீரத்தின் உயிரைக் கொடுத்தேன். என் பிள்ளையோ எனது ஆத்துமத்துக்கு உயிர்ப்பிச்சை தந்தார். நான் அவருக்குப் பிதாவாய் இருக்க ஒருசிறிதாவது பாத்திரனாகும்படிக்கு எனக்காக விசேஷமாக வேண்டிக்கொள்ளும்.

ஏய்றேல்.

## 2

வைகாசி 1913.

அருமைப் பிதாவே,

நான் அதிகமாக நேசித்து இப்போது இழந்து துயரப்படும் எனது பீற்றருக்குப் பதிலாக இக்கடிதத்தை உமக்கு எழுதுகிறேன். இழந்துவிட்டேனா? அம்மொழியைப் பாவிப்பது சரியென எனக்குத் தோற்றவில்லை. ஏனெனில் எக்காலத்திலும்பார்க்கத் தற்போதே அவர் எனக்கு அதிகம் கிட்ட இருக்கிறார். உயிர்த்த ஞாயிற்றுக்கிழமையன்று திவ்விய நற்கருணை வாங்கினேன். எனக்கு அவர் தனது மரணத்தினால் பெற்றுத் தந்த புதுச் சீவியத்தின் முதற் சற்பிரசாதம் இதுவே. சற்பிரசாதம்பெற்றபின் எனது ஆத்துமத்தின் அந்தரங்கத்தில் எனது பிள்ளையின் குரலோசையைக் கேட்டேன். "அப்பு, யேசுநாதருக்கருகிலே ஒவ்வொருநாளும் நான் இருந்ததுபோல, நீருமிருக்கவேணும்''. நான் அக்குரலைக் கேளாதவனைப்போல் இருக்கத் தெண்டித்தேன். ஆனால் அக்குரலோ என் இருதயம் முழுவதையும் நிரப்பிச் சந்தோஷத்தினால் தேங்கச்செய்தது. "என்னுடைய சின்ன அப்பு, நான் எவ்வளவு அருமையான பலியைக் கொடுத்து உம்மை மனந்திருப்பி, உமது ஆத்துமத்தை மீண்டேன்'' என்ற குரல், திரும்பவும் திரும்பவும் என்னை அருட்டிக்கொண்டேயிருந்தது.

இவ்விதமாகவே, பலநாள் எனது பிள்ளை என்னை ஏவிக்கொண்டேயிருந்தான். விசேஷமாக பீற்றர் நற்கருணைபெறச் சென்ற காலைநேரமாகிய வேளைகளிலேயே, அவர் என்னை அதிகமாகத் தூண்டினார். கடைசியாய், நான் அக்குரலுக்கு அமைந்தேன். திராட்சத்தோப்பில் வேலைசெய்யப் புகுந்தவர்களுள் ஆகப் பிந்தி வந்தவனாகிய நான், அவருடைய அடிச்சுவடுகளைக் கூடியளவு பின்பற்றுவேன். தினமும் நற்கருணை உட்கொள்ளுவதாகத் தீர்மானம்செய்துகொண்டேன். அத்தீர்மானம் என் மனதைச் சமாதானத்தினால் நிரப்பியிருக்கிறது. இப்போ எனக்குள்ள விருப்பம் ஒன்றேயொன்று. அதாவது: அவருடைய பரிசுத்த சீவியத்



தை நானும் பின்பற்றி நடக்கவேணுமென்றதே. அவர் தன்னை முற்றுமே பலியாக்கினார். பூரணமாகவே தன்னைப் பரித்தியாகம்பண்ணிவிட்டார். நான் அவருக்கு முன்மாதிரி காட்டக் கடமைப்பட்டவனாயிருந்தேன். ஆனால் இப்போது அவரே எனக்கு முன்மாதிரி காட்டுகிறார். அவர் கெதியாய் நடந்த பாதையால் அவருடைய சீஷனாகிய நான் அவரைப் பின்பற்றி மெதுவாகவாவது நடக்கத் தெண்டிப்பேன்.

இன்று காலமே எனது பூந்தோட்டத்துள் உலாவிக்கொண்டு நிற்கும்பொழுது அன்றிரவு விரிந்த ஓர் அழகிய லில்லிமலரைக் கவனித்தேன். அந்த லில்லிச்செடியின் அடியிலே மண்ணுடன் மருவினாற்போல் ஒரு மிகவும் சிறிய மென்மையான வெள்ளை மலரைக் கண்டேன். உயர்ந்து நின்ற லில்லிமலரிலிருந்து வடிந்து விழுந்த அதன் ஒரு துளிபோல் அச்சிறிய பூத் தோற்றியது. அதன் அடியிலே, அதன் நிழலிலே இது மெதுவாக வேர் ஊன்றியவாறாய்த் தோற்றினது.

அந்தச் சின்னஞ் சிறிய மலரைப்போலவே நானுமிருக்க விரும்புகிறேன்......எனது பிள்ளையின் நிழலிலே, அவருக்குப் பக்கத்திலே எனது சீவியத்தைக் கழிக்க ஆவலுடையவனாய் இருக்கிறேன்.

"பாவியாகிய எனதாத்துமத்துக்காக வேண்டிக்கொள்ளும்''.

ஏய்றேல்.

# முடிவுரை.

தற்போது சிறிய பீற்றர் இளைப்பாறுகிறார். கடலோரத்திலே ஓர் குன்றின் நுனியிலே, தேவதூதர்கள் காவல்புரிந்து நிற்கும் பெரிய காலையிலே அவர் நித்திய இளைப்பாற்றிசெய்கிறார். சிவத்த வயிரக்கல்லாற் செய்யப்பட்ட ஓர் சிலுவை அவருடைய கல்லறைமேல் நாட்டப்பட்டிருக்கிறது. வெண்ணிற ரோசாமலர்கள் அச்சிலுவையைப்பற்றிவளர்ந்திருக்கும் செடிகளுள் கொத்துகளாக இலங்குகின்றன. சிலுவையின் பாதமோ பளிங்குக்கல்லாற் செய்யப்பட்டு, அதன் நடுவில் ஓர் பாத்திரமும் கொத்துவேலையாற் செய்யப்பட்டிருக்கிறது. அதனடியில் சிறுவர்களின் அன்பராகிய எங்கள் யேசு இரட்சகரின் வார்த்தைகள் வரையப்பட்டிருக்கின்றன. "சிறு பிள்ளைகளை நம்மிடம் வரவிடுங்கள். தடைசெய்யாதீர்கள். ஏனெனில் மோட்ச இராச்சியம் அவர்களுடையதே"!

குறிக்கப்பட்ட பாத்திரத்தின் மேலே கிண்ணமும் ஒன்று கோதி இருக்கிறார்கள். அதிகமான வேளைகளில் அக்கிண்ணம் பனிநீரால் நிறைந்திருக்கும். சுற்றவர நிற்கும் மரங்களில் கூடு கட்டியிருக்கும் சிறிய பட்சிகள் தாகமானவேளைகளில் அந்நீரைக் குடித்துத் தம் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்.

இப்போது பரகதியிலிருந்து தாம் இவ்வுலகில் விட்டுச் சென்ற தம் சகோதராராகிய நம் மெல்லவருக்காகவும் பீற்றர் பரம பிதாவைப் பார்த்து இரந்து மன்றாடுகிறார் என்பது திண்ணம். ஒளிவிட்டிலங்கும் வான இராச்சியத்திலே, பரம பிதாவின் திருக்கரங்களால் அரவணைக்கப்பட்டபடி அவர் நின்று, பிதாவின் அன்பே சொலிக்கும் திருமுகத்தைப் பார்த்து அவர் எங்களுக்காகச் சொல்லும் செபமாவது:—

"வெயில் அகோரமாய் எறிக்கும் நாட்களில் உம்மைப்பார்த்து இரந்து நிற்கும் ஆகாயத்தின் பட்சிகளுக்குத் தேவையான நீர்த்துளியைக் கொடுக்கும் கர்த்தாவே! தினமும் அப்பட்சிகளைப் போஷிப்பதற்கு வேண்டிய தானியங்களை உமது களஞ்சியங்களிலே சேர்த்துவைத்திருக்கும் பிதாவே, ஆத்துமத்தின் பசியினால் வதங்கி வாடி, உம்மைப் பார்த்துக் குரவையிட்டழும் சிறியார்களின் ஆத்துமங்களைப் பசியினால் மாள ஒட்டாதேயும். லில்லிமலரைத் தூய வெண்மையால் உடுத்தி அலங்கரித்து, அதை வானத்தில் நின்று இறங்கும் பனித்துளியால் தூய்மை செய்பவரே, உமது அன்றன்றுள்ள அப்பத்தினால் உமது சிறிய பிள்ளைகளின் ஆத்தும தூய்மையைக் காத்தருளும். அவர்களுக்கு எப்பொழுதும் பிள்ளைகளின் அப்பத்தை ஆவலுடன் பங்கிடும் குருக்களைக் கொடுத்தருளும். தங்கள் மேலான, மேன்மைவாய்ந்த அழைத்தலை நன்றாய் விளங்கி உணர்ந்த தாய்மார்களை அவர்களுக்குக் கொடும். உம்முடைய திவ்விய இருதயத்தின் பான்மையாகவே, மாதாக்களின் இதயங்களையும் நீர் சிருட்டித்தீர். ஏனெனில் அவைகள் உமது இனிய அன்பையே எங்கள் ஞாபகத்துக்குக் கொண்டுவருவன. எங்கள் சரீரங்களுக்கு மாத்திரமல்ல, எங்



கள் ஆத்துமங்களுக்கும் அவர்கள் தாய்மாராய் விளங்கவேண்டுமென்றதற்காகவே அவர்களின் இதயங்களை அவ்விதம் அமைத்தீர். எங்கள் ஆத்துமங்களிலே நித்திய சீவியத்தின் வித்துக்களை விதைக்கவும், அவைகளிலே எங்கள் தேவன் வாசஞ்செய்யும்படிபண்ணவுமே நீர் தாய்மார்களின் கைகளை நித்தியமாய் அபிஷேகம்பண்ணி இருக்கின்றீர். குருவானவர் வானத்தினின்று தேவனை அப்பத்தின் குணங்களுக்குள் இறங்கப்பண்ணுவார். தாய்மாரோ எங்கள் ஆண்டவரைப் பிள்ளைகளின் ஆத்துமத்திலே இறங்கப்பண்ணுவார்கள்.

ஆ! அன்புள்ள எசமானே! உமது சிறிய பிள்ளைகளின் செபங்களைக் கேட்டருளும். அன்றன்றுள்ள அப்பத்தை அவர்கள் உம்மிடம் இரந்துகேட்கும்பொழுது "அதை அவர்களுக்குக் கொடுக்க அங்கே ஒருவருமில்லை" யென்ற துயரமான சொற்கள் எக்காலமுமே இவ்வுலகில் இல்லாது அகற்றியருளும்.

பளபளென இலங்கும் பரகதியின் சிம்மாசனத்திலிருந்து இவ்விதமாகவே சிறிய பீற்றர் எங்களுக்காக மன்றாடிக்கொண்டிருக்கிறார் என்பது திண்ணம். மன்றாடும் அவ்வேளைகளிலெல்லாம் துன்பமே நிறைந்த இந்தப் பூவுலகிலுள்ள குழந்தைகளின் காவற்சம்மனசுகள் யாவரும் தங்கள் இரு கரங்களையும் கூப்பி ஓரே சத்தமாக "ஆமேன்! ஆமேன்!" எனக் கூறி, முகமலர்ந்து தலைவணங்கி நிற்பார்களன்றோ?

—:0:—

005274